# சிறப்புத் திட்டச்
# செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
2023-2024

## மானியக் கோரிக்கை எண். 53


# உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| I. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | | | |
| 1. | முன்னுரை | | 1 - 4 |
| 2. | துறையின் முக்கியச் செயல்பாடுகள் | | 5 - 8 |
| 3. | கண்காணிப்பு | | 8 - 9 |
| | 3.1 | கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு | 9 - 10 |
| | 3.2 | தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலைக் கண்காணிப்பு | 10 - 12 |
| | 3.3 | உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் | 12 - 16 |
| | 3.4 | கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 16 - 49 |
| | 3.5 | மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் | 49 - 53 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 4 | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்னெடுப்புகள் | | 53 |
| | 4.1 | மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பாய்வுக் கூட்டங்கள் அ) முத்திரைத் திட்டங்கள் ஆ)முன்னுரிமைத் திட்டங்கள் இ)மின்னாளுமைத் திட்டங்கள் | 54 - 58 |
| | 4.2 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மண்டல அளவிலான கள ஆய்வுகள் – "கள ஆய்வில் முதலமைச்சர் " | 58 - 63 |
| | 4.3 | உங்கள் தொகுதியில் முதலமைச்சர் | 63 - 69 |
| | 4.4 | தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் | 69 - 76 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 4.5 | களஆய்வு அலுவலர்கள் | 77 - 81 |
| | 4.6 | மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுகள் | 81 - 83 |
| II.தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் | | | |
| 1. | முன்னுரை | | 84 - 92 |
| 2. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் | | 93 - 101 |
| 3. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்- இணைய முகப்பின் சிறப்பு அம்சங்கள் | | 102 – 107 |
| 4. | உலகத்  திறன் போட்டிகள் 2022 | | 107 – 110 |
| 5. | முன் கற்றலின் அங்கீகாரம் (Recongnition of Prior Learning) | | 110 – 111 |
| 6. | வாழ்வாதார மேம்பாட்டிற்கானத் திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP) | | 111 – 123 |

| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 7. | தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் | 123 – 126 |
| 8. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சிறப்புத் திட்டங்கள் | 127 – 131 |
| 9. | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் | 131 – 133 |
| 10. | நான் முதல்வன் | 133 – 152 |
| 11. | மேலும் திறன் அளித்தல், வேலைக்கான வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்புக்கான நான் முதல்வன் இணைய முகப்பு | 152 – 166 |
| 12. | நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள் | 167 – 169 |
| III. முடிவுரை | | 170 -172 |

# I. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

### 1. முன்னுரை

தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சமுதாயத்தின் அடித்தட்டு மற்றும் விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்திற்கான எண்ணற்ற புதுமையானத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்கள் அரசின் தொலைநோக்குத் திட்டங்களுடனும் ஒன்றிணைந்துள்ளன. இத்திட்டங்கள் மாநிலத்தின் நலன் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்யும் அரசின் நடவடிக்கைகளுக்குச் சான்றாக உள்ளன. இந்த அரசு, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், அனைத்து முக்கிய துறைகளையும் ஒரே சமயத்தில் ஊக்குவிப்பதன்

மூலமாகவே இதை அடைய முடியும் என உறுதியாக நம்புகிறது. பல்வேறு துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள், மாநிலம் தொழில் வளர்ச்சி காணவும், சமுதாய மாற்றம் அடையவும், கல்வித் திறனில் மேம்படவும் மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சி அடையவும் உதவுவதுடன் மாநிலத்தையும் ஒட்டு மொத்த வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் செல்லும்.

இத்தகைய தொலைநோக்குத் திட்டத்துடன் இந்த அரசு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும், கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இவை மட்டும் அல்லாமல் இந்த அரசு தொழில் வளர்ச்சிக்கு

சாதகமானச் சூழ்நிலையை உருவாக்குவதுடன், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பது, முக்கிய தொழிற்சாலைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவது, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கானப் புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதுடன் தொழில் வளர்ச்சிக்கான தொழில் தடங்கள் மற்றும் தொழிற்சாலைத் தொகுப்புகளையும் உருவாக்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையான "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை" அடையும் நோக்கத்தின் அடிப்படையிலேயே இத்திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களின் பலன்கள் உரிய பிரிவுகளைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக சம்மந்தப்பட்ட துறைகளுடன் மாநில அளவிலும் மாவட்ட அலுவலர்களுடன் "கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற மண்டல அளவில் நடைபெறும் ஆய்வுக்

கூட்டங்களின் போதும் ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தகைய ஆய்வு கூட்டங்கள் மற்றும் கள ஆய்வுகளின் முக்கியத்துவத்தை "***அளவிடப்பட்டு கண்காணிக்கப்படும் செயலே வெற்றி பெறும்***" என்ற புகழ்பெற்ற கூற்றின் அடிப்படையில் வலியுறுத்தி வருகிறார்கள்.

அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் பொருட்டு அரசின் அனைத்துத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன் உயர்நிலை ஆய்வு கூட்டங்களை நடத்துவதன் மூலம் இத்திட்டங்களின் முன்னேற்றங்களை உறுதி செய்வதுடன் அவை உருவாக்கப்பட்ட உன்னதமான இலக்குகளை அடைய உதவும் வகையில் செயல்படுவதே இத்துறையின் முக்கிய பணியாகும்.

## 2. துறையின் முக்கியச் செயல்பாடுகள்

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் பின்வரும் முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசின் கண்காணிப்பு அமைப்பாக செயல்படுவதற்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.
- சட்டமன்றப் பேரவை மற்றும் பல்வேறு அரசு விழாக்களில் வெளியிடப்படும் அனைத்துக் கொள்கை அறிவிப்புகளுக்குத் தேவையான ஆணைகள் வெளியிடப்படுவதைக் கண்காணிப்பதற்கும் அதன் செயலாக்கத்தினைக் கண்காணிக்கவும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு "முன்னுரிமைத் திட்டங்களின்" பயன் உரிய நேரத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவரையும்

சென்றடைவதை உறுதி செய்ய தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

- பல்வேறு அரசுத் துறைகளால் மிக அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முத்திரைத் திட்டங்கள் ஒவ்வொன்றும் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி அவை அடைய வேண்டிய முன்னேற்ற இலக்குகளை அடைவதை உறுதி செய்யும் வகையிலும், அத்திட்டங்கள் உரிய காலத்தில் முடிக்கப்பட்டு அவை பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் வகையிலும் அவற்றைத் தொடர்ந்து கண்காணித்தல்.
- அரசின் நிர்வாகத்திலும் பொதுமக்களுக்கு அரசால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், பல்வேறு அரசுத் துறைகளில் எடுக்கப்படும் மின் ஆளுமை முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

- அரசுத் துறைகளின் மூலமாகக் குறிப்பிட்ட காலங்களில் மக்களுக்குச் சென்றடைய வேண்டிய பலன்கள் தாமதமின்றி சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கத்தில் தொடர்புடைய துறைகளுடன் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
- சம்மந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலமாகத் திட்டங்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பை உறுதிபடுத்துதல்.
- அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் நடத்தப்படும் மாதாந்திர கூட்டங்கள் மூலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வின் போது கிடைக்கப்பெற்ற விவரங்கள் / பரிந்துரைகளின் அடிப்படையில், அரசின் பல்வேறு துறைகள் தங்கள் திட்டங்களில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ள உதவுதல்.

- அவ்வப்போது அரசால் இத்துறைக்கு வழங்கப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட பணிகளைத் திறம்பட நிறைவேற்றும் பொருட்டு, கள அனுபவம் மற்றும் கள நிபுணத்துவம் கொண்ட அலுவலர்கள், தொடர்புடைய பல்வேறு துறைகளிலிருந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**3. கண்காணிப்பு**

கண்காணிப்பு என்பது தகவல்களை முறையாகச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து அதன் மூலம் ஒரு திட்டத்தின் முன்னேற்றம் அதன் இலக்கை நோக்கி பயணிப்பதை உறுதி செய்வதோடு, திட்டத்தை செம்மைப் படுத்துவதற்குத் தேவையான இடைநிலைத் திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை வழி நடத்துதல் ஆகும். ஆகவே, கண்காணித்தலின் மூலம் திட்டங்களின்

முன்னேற்றத்தைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், களத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு உரிய தீர்வுகளைத் தொடர் மதிப்பீடுகளின் மூலமாகவும் வழங்க இயலும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களின் செயல் நிலையைச் சேகரித்துப் பதிவு செய்கிறது. முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளையும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்கானப் பகுப்பாய்வு அறிக்கைகளையும் அவ்வப்போது தயார் செய்கிறது. அவ்வகையில், கண்காணிப்புத் தொடர்பான பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1. கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட

அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாவட்ட பயணங்களின்போது அறிவிக்கப்படும் மற்றும் இதர அரசு விழாக்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தினைக் கண்காணிப்பதே சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கியப் பணியாகும்.

## 3.2 தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலைக் கண்காணிப்பு

தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறை சார்ந்த கொள்கை அறிவிப்புகளின் நிலையைப் பதிவு செய்வதற்காக ஊடாடும் வலைப்பக்கத்தை (Interactive Webpage) இத்துறை

வடிவமைத்து தலைமைச் செயலக உள்வலைய (Intranet) இணையத்தில் நிர்வகித்து வருகிறது. பல்வேறு வகையான பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரிக்கத் தேவையானக் கண்காணிப்பு மென்பொருளும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளில் தேவைக்கேற்ப மாறுதல்கள் அவ்வப்போது இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் நிலையினை உள்வலைய இணையப் பக்கத்தில் தொடர்ந்து பதிவு செய்திட ஏதுவாக அரசின் அனைத்து நிர்வாகத் துறைகளும், தங்கள் துறை சார்ந்த "தொடர்பு அலுவலர்களை" (Nodal Officers) நியமித்துள்ளன.

நிகழ்நிலை கண்காணிப்பில் பல்வேறு துறைகள் தெரிவிக்கும் முன்னேற்ற விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகளின் செயல்பாட்டு நிலை வகைப்படுத்தப்பட்டு, அரசுத்

தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்படும் அனைத்துச் செயலாளர்கள் கூட்டங்கள் மற்றும் உயர்நிலை ஆய்வு கூட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**3.3 உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள்**

அரசால் வெளியிடப்படும் பல்வேறு திட்டங்கள் வெற்றி அடைவதை உறுதி செய்வதற்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு நிலைகளில் அதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டதா மற்றும் அது செயலாக்கத்தில் உள்ளதா என்பதை ஆய்வு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

குறிப்பாக, அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், உட்கட்டமைப்பு திட்டங்கள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு போன்ற திட்டங்களின் பலன் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி

செய்வதன் மூலமாக மாநிலம் ஒருங்கிணைந்த வளர்ச்சி யினை அடையும்.

எனவே, இத்துறை அறிவிப்புகளுக்கான உரிய ஆணைகள் வெளியிடப்படுவதையும் அவை செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்ய உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறது. இதன் மூலமாக அறிவிப்புகள் கள அளவில் செயல்படுத்தப்படுவதையும் அவற்றின் நோக்கங்கள் நிறைவேறுவதையும் உறுதி செய்ய முடிகிறது.

கீழ்க்கண்ட உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசுத்துறை செயலாளர்களுடன் கொள்கை அறிவிப்புகள், முன்னுரிமைத் திட்டங்கள் (ம) முத்திரைப் பதிக்கும் திட்டங்கள் குறித்தும், துறைகளுக்கிடையேயான

ஒருங்கிணைப்பு குறித்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்டங்களில் "கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற திட்டத்தின் மூலம் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.
- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் அனைத்து செயலாளர்களுடன் மாதந்திர ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.
- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.
- அரசுத் தலைமைச் செயலாளர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர்

அலுவலகத்தாலும் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.

- தேவைப்படும் நிகழ்வுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால் துறைக்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்பு கூட்டங்கள் கருப்பொருளுடன் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் தேவையின் அடிப்படையில் நடத்தப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயர்நிலை ஆய்வுக்கூட்டங்களுக்கு தேவையான ஆய்வுக்குறிப்புகள், கையேடுகள், முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators) இத்துறையால் தயார்

செய்யப்படுகின்றன. மேலும், முந்தைய ஆய்வுக் கூட்ட குறிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட அளவிலும் கள அளவிலும் ஆய்வுப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## 3.4 கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

திட்டச் செயலாக்கத்தின் பலன்களை முழுமையாக அடைவதற்கு முக்கியக் காரணியான தொடர்புடைய துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு முயற்சி இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகள் பல்வேறு நிர்வாகத் துறைகளின் செயலாக்கத்தின் கீழ் வருகின்றன. மக்களின் நலன் மற்றும் வளர்ச்சி சார்ந்த அரசின் இலக்குகளைத் தொடர்புடைய

துறைகள் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் சிறப்பாக நிறைவேற்றிட முடியும். இலக்குகளை அடைவதற்காகக் கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு அணுகுமுறை இத்துறையால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதில், பொதுவான நோக்கத்தை கொண்டுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டங்கள், கருப்பொருள் வாரியாக தொகுக்கப்பட்டு, அதன் செயலாக்கம் ஒருங்கிணைந்த முறையில் கண்காணிக்கப்படுகிறது.

திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் களைவதற்குரிய நுண்ணிய வழிமுறைகளை இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை அளிக்கின்றது.

இக்கருப்பொருள் அடிப்படையில், செயல்படுத்தப்படும் திட்டங்களில் உள்ள சிக்கல்களைக் களைவதற்குத் தேவைகள் அடிப்படையில் தொடர்புடைய துறைகளுடன் அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள்

நடத்தப்படுகின்றன. திறம்பட்ட முழுமையானக் கண்காணிப்பிற்குப் பின்வரும் பன்னிரெண்டு கருப்பொருள் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### 3.4.1. நீர்வளங்களை மேம்படுத்துதல்

தங்கு தடையின்றி குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீரினை நிலையாக வழங்குவதை உறுதி செய்திட நிலத்தடி நீர் மட்டம், மேற்பரப்பு நீர் சேமிப்புத் திறன், மண்ணின் ஈரப்பதம், பசுமைப்பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பது என்பன மிகவும் அவசியமாகிறது. நீர்வளத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நீர்நிலைகள் பாதுகாப்பு, ஆறுகள் பாதுகாப்பு, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், மண் வளம் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு, கழிவு நீர் மேலாண்மை, காடு வளர்ப்பு போன்ற திட்டங்கள், நீர்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம் ஆகிய பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நீர்நிலைகளின் அளவீடுகள் அடங்கிய பதிவுகள், ஆக்கிரமிப்புகளை அடையாளம் காண்பது மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து நீர்நிலைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பங்கு இன்றியமையாததாகிறது. நீர்வளங்களை மேம்படுத்துதல், நீர் வீணாவதைத் தடுத்தல், மறுசுழற்சி செய்யப்பட்ட நீரினைப் பயன்படுத்துவதை அதிகரித்தல் போன்ற நிலையான நீர் இருப்புக்கான அரசின் தொலைநோக்குத் திட்டங்களை விரைவாக அடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது, இக்கருப்பொருள் தொடர்புடைய அனைத்து துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைக்கும்.

### 3.4.2. வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல்

விதைகள் மற்றும் நாற்றுகள், போதுமான பாசன நீர், உரங்கள், வேளாண் இயந்திரமயமாக்கல், சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்துதல், அங்கக வேளாண்மைக்கான இடுபொருள்கள், பயிர்க் கடன் மற்றும் விரிவாக்க நடவடிக்கைகள் போன்றவை வேளாண் உற்பத்தி மற்றும் விளைச்சலை பெருக்குவதற்குத் தேவைப்படும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடுகள் ஆகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகியவை வேளாண் பொருட்களின் பின்செய் நேர்த்தி நிலையில் விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் முக்கிய பங்களிக்கின்றன.

வேளாண்மை மற்றும் உழவர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை போன்றவை உழவர்களுக்குத் தேவையான மேற்கண்ட உதவிகளை நேரடியாக செய்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி செயலி, இணையவழி சாதனங்கள், தொலையுணர்வு தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலமாகவும் இத்துறை தனது பணியினைச் சிறந்த முறையில் செயல்படுத்த உதவுகிறது. மாநிலத்தின் முதன்மைத் திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான ஒருங்கிணைந்த

முயற்சியினை தொடர்புடைய துறைகள் மேற்கொள்வதுடன், நீர்வளத் துறை செயல்படுத்தும் தடுப்பு அணைகள் திட்டத்தில் கட்டப்படும் தடுப்பு அணைகளைத் தேவைப்படும் இடத்தில் முறையாகத் தேர்வு செய்து கட்டப்படும் பட்சத்தில், நீண்டகால தரிசு நிலங்களையும், மானாவாரி நிலங்களையும் விவசாய பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களான 11.75 இலட்சம் எக்டர் கூடுதலாகப் பயிரிடுதல், 10 இலட்சம் எக்டர் அளவுள்ள இருபோக சாகுபடி நிலங்களை இரு மடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழ்நாட்டை இடம் பெறச் செய்தல் போன்ற நோக்கங்களை பத்தாண்டுகளுக்குள் நிறைவேற்றுவதற்கு

சம்மந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதை இத்துறை கண்காணிக்கும்.

### 3.4.3. அனைவருக்கும் வீடு

வீட்டுவசதித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை – தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளின் மூலம் தகுதிவாய்ந்த நகர்ப்புர மற்றும் ஊரக ஏழை மக்களுக்காகச் செயல்படுத்தப்படுகின்றன. நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் வருவாய்த்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. புதுமையான, விரைவான கட்டுமானத் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்திட பொதுப்பணித் துறையின் ஆலோசனையும் பெறப்பட வேண்டிய அவசியம் உள்ளது. “10 ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில்

20 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் மற்றும் நகர்ப்புரங்களில் 9.75 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டப்படும்" என்ற இந்த அரசின் தொலைநோக்கு இலக்கை விரைவாக அடைய தொடர்புடைய துறைகளுக்கு இடையே தேவையானத் தகவல் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

### 3.4.4. கல்வித் தரத்தை உயர்த்துதல்

அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளிகளில் பயில்வதற்குரிய வாய்ப்பும், அதன் மூலம் அவர்கள் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான அனைத்தும் உள்ளடக்கிய, தரமான கல்வியை அனைத்து பள்ளிகளிலும் வழங்குவதே பள்ளி கல்வித் துறையின் முக்கிய நோக்கமாகும். கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளை ஈடுசெய்யும் நோக்கத்தில், 'இல்லம் தேடி கல்வி' என்ற முதன்மைத் திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. 'எண்ணும் எழுத்தும் இயக்கம்'

ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளிடையே, எழுத்தாற்றல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், கற்றல் அடைவுகளை சிறந்த வகையில் பெறுவதற்குரிய நடவடிக்கைகளான திறன் வகுப்பறை, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள், நூலகங்கள் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

வேகமாக வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாகப் பாடத்திட்டங்களைத் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதுப்பித்து, புதிய மற்றும் கூடுதல் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துதல் நவீன தொழில்நுட்பங்களைக் கற்பிக்கும் வகையில் அவற்றைப் பள்ளி மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் சேர்த்தல் என்பது அவசியமாகியுள்ளது. தொழிற்பயிற்சி

நிறுவனங்கள் தற்போது தொழிற்துறை 4.0 தரநிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தொழிற்பயிற்சி நிறுவனப் பயிற்றுநர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையிலானத் தொடர் பயிற்சி அளிப்பதும் அவசியமாகிறது. இவையனைத்தும், எப்போதும் வளர்ந்து கொண்டேயிருக்கும் தொழில்நுட்பத்தின்படி தொழில் நிறுவனங்களின் மாறிவரும் திறன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இளம் தலைமுறையினரை எதிர்கால தேவைக்கேற்ப தயார்படுத்துவதற்கும் அவசியமானதாகும். வழிகாட்டுதல் (Mentorship) மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் (Career Guidance) ஆகியவை பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி பாடத்திட்டத்தில் ஒரு அங்கமாக உருவாகியுள்ளன. மேற்குறிப்பிட்ட தேவைகளில் காணப்படும் இடைவெளியைக் களைவதே அரசின் முதன்மைத் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தரமானக் கல்வி வழங்கப்படுவதைக் குறிக்கும் செயல்திறன் குறியீடுகளை அடைவதற்கு, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி துறைகள் முக்கிய பங்காற்றினாலும், அவற்றுக்கு இணையாகப் பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை ஆகிய துறைகளின் மூலம் தரமானக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் ஊட்டச்சத்து அளித்தல் ஆகிய பங்களிப்புகள், தரப்படுத்தல் குறியீட்டெண் (Performance Grading Index) / தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) ஆகியவற்றின் தரவரிசையில் உயர்நிலையை அடைவதற்கும், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரப் பேரவை (NAAC) போன்ற அமைப்புகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் உதவும். பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் போன்ற

பள்ளி உட்கட்டமைப்புத் திட்டங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், தேசிய இளம் சிறார் நலத்திட்டம், கண்ணொளித் திட்டம் போன்ற பள்ளி குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம், தேசிய ஊட்டச்சத்து குழுமத் திட்டங்கள் போன்ற ஊட்டச்சத்துக்கானத் திட்டங்கள் ஆகிய முக்கியத் திட்டங்கள் தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்த வேண்டியுள்ளது. எனவே, கற்றல் விளைவுகளை மேம்படுத்த இத்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

### 3.4.5. சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல்

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 3-ன் குறிக்கோளான, அனைவருக்கும் "ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" என்கிற நிலையை அடைவதற்கு, பொது சுகாதாரத்தை பராமரித்தலும், தரமான மருத்துவக் கல்வியும்,

வலுவான மருத்துவக் கட்டமைப்பும் அவசியமானதாகும். தற்போதைய சூழ்நிலையில், கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள இடைவெளியை சமன் செய்வது என்பதும் முக்கியமானதாக உள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டு அரசால் தொடங்கப்பட்ட முதன்மைத் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைச் சென்றடைவதில் இருந்த சவால்களைக் களைந்து, மருத்துவ சேவையை இல்லங்களுக்கே சென்று வழங்கிடுவதற்கான வழிவகையை உருவாக்கியுள்ளது. சிசு இறப்பு விகிதம், மகப்பேறு இறப்பு விகிதம், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற முக்கிய சுகாதாரக் குறியீடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், இக்குறியீடுகளை மேம்படுத்துவற்கு, தாய்-சேய் நலத் திட்டங்கள் மற்றும் அங்கன்வாடிகளில் குழந்தைகளின் வளர்ச்சிக் கண்காணிப்பு (Growth Monitoring) ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டியது

அவசியமாகிறது. இவற்றைத் தவிர, தூய்மையான சூழலை பேணும் கட்டமைப்பு, அனைத்து வயதினரிடையேயும் தனிநபர் சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவித்தல், அங்கன்வாடிகள் மற்றும் பள்ளிகளில் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவை, ஊட்டச்சத்து குறைபாடுகளை தடுப்பதற்கும், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் வழிவகுக்கும். இவை அனைத்தும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, பள்ளிக் கல்வி, பொதுப்பணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி போன்ற துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம் அடைந்திட இயலும்.

### 3.4.6. அனைவரும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion)

’எவரும் விடுபடாமல், அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின்

பயன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சென்றடைவதை உறுதி செய்வதே சமூக உள்ளடக்கத்தின் நோக்கமாகும். இருப்பினும், விளிம்புநிலையில் உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், மகளிர் மற்றும் முதியோர்கள் ஆகியோரின் வாழ்வினை மலரச் செய்யக்கூடிய, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள், பாலின சமத்துவம், வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள், புதுமைப் பெண் திட்டம். உரிமைகள் திட்டம் (RIGHTS Project), மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, வன உரிமைகள் சட்டம் 2006, போன்ற திட்டங்கள் மற்றும் சட்டங்களை செயல்படுத்துவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் தொடர்புடைய துறைகளிடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கை அவசியமாகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், (தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம்)

(TAHDCO) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மாற்றுத் திறனாளிகள் நலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், பொது மற்றும் உள்துறை ஆகிய துறைகள், இந்த அரசின் உன்னதமான தொலைநோக்குத் திட்ட இலக்குகளை அடைய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது.

**3.4.7. உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி**

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தற்போது தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக விளங்கி வருவதுடன், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும் திகழ்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 2030-31 ஆம் நிதியாண்டிற்குள் ஒரு டிரில்லியன்

அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சியடைய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதை;ச சாத்தியப்படுத்துவதற்குத் தொழில்துறையின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். தொழில் உற்பத்தித் துறையில் முதலீட்டை ஈர்த்திடத், தேவையான பல நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. வழிகாட்டி நிறுவனம் (GUIDANCE) மூலம் தமிழ்நாட்டில் முதலீடுகள் ஈர்த்தல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான சூழல் அமைப்பினை (Eco-system) மாற்றி அமைத்திடுவதன் மூலம் மாநிலத்தில் தொழில்துறை வளர்ச்சியை வேகப்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மின்னணு, ஆட்டோ உதிரி பாகங்கள், தொழிற்பூங்காக்கள், தடையில்லா வர்த்தகக் கிடங்கு மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், பொது உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், காலணி, மருந்து மற்றும் ஜவுளி, அத்துடன் மரச்சாமான்கள்

உற்பத்தி, மின்சார வாகனங்களுக்கான மின்னேற்று உட்கட்டமைப்பு ஆகிய குறிப்பிட்ட துறைகளில் மிகப் பெரிய அளவில் முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

எனவே, இந்த அரசு, மிகப் பெரிய தொழிற்பூங்காக்கள், பெரிய தொழில்துறை கூடங்கள், மிகப் பெரிய அளவிலானத் தொழிற் பேட்டைகள், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) மூலமாக தொழில் துவங்குவதற்கும், தொழில் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை மூலம் மாநிலத்தின் தொழில் துறையின் மேம்பாட்டிற்காக ஒற்றைச் சாளர இணையதளம் வாயிலாக முதலீட்டு வசதி மற்றும் பின்பராமரிப்பு வசதிகள் செய்யப்படுகின்றன. இத்துறையானது மேற்கண்ட திட்டங்களை, உயர்நிலையில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுப்பதன் மூலம் மொத்த மாநில உற்பத்தியில் அதிகபட்ச பங்கை தொழில்

துறை பதிவு செய்வதற்குரிய சூழலை ஏற்படுத்திட உதவிடும்.

மேலும், முதலீடுகளை ஈர்ப்பதற்கு சாலை, இரயில் மற்றும் விமான இணைப்பு, நீர், மின்சாரம் மற்றும் சந்தை உள்கட்டமைப்பு போன்ற வலுவான உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. போக்குவரத்து, எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள், பொதுப்பணி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை போன்ற துறைகள் தொழில் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் வலுவான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முடியும். தேவைகளுக்கு ஏற்ப, தொடர்புடைய துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை

நடத்துவதற்கான முன்னெடுப்பினை இத்துறை மேற்கொள்ளும்.

### 3.4.8. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு

தமிழ்நாட்டின் திறன்மிக்க மனிதவளம், மாநிலத்தில் முதலீட்டை ஈர்ப்பதற்கு முக்கிய காரணியாக விளங்குகிறது. மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான மிக முக்கிய காரணிகளில் ஒன்றாக 'திறன் மேம்பாடு' விளங்குகிறது. எனவே, இளைஞர்களிடையே உள்ள திறன் இடைவெளிகளைப் பகுப்பாய்வு செய்து, அவர்களுக்கு உரிய திறன் பயிற்சிகளை அளித்து, அதன் மூலம் அவர்கள் தரமான வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குரிய தகுதியை ஏற்படுத்துவது அல்லது அவர்களை வெற்றிகரமான தொழில் முனைவோராக மாற்றுவது போன்ற நடவடிக்கைகளில் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு,

பள்ளிக் கல்வி, உயர்கல்வி, தொழில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் ஆகிய துறைகளின் பல்வேறு திட்டங்களின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தகைய பயிற்சிகளை அனைத்தும், தேவைப்படும் நபர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதும், பயிற்சி முடித்த நபர்கள், வேலைவாய்ப்பை பெறுவது என்கிற வரையில் அல்லது அவர்கள் விரும்பும் சொந்த வணிக அமைப்புகளைத் தொடங்குவது வரையிலும் அவர்களைப் பின்தொடர்ந்து உதவுதல் என்பது முக்கியமானதாகும்.

அரசின் முதன்மைத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டம், 01.03.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி

வைக்கப்பட்டது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதும், அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதும், தொடர்புடைய துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து சிறப்பானச் செயல்பாட்டிற்குரிய சூழல் அமைப்பை ஏற்படுத்தித் தருவது என்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்ற இந்த அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் இலக்கினை அடைந்திடவும் மேற்குறிப்பிட்ட துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகிறது.

### 3.4.9 முறையான கடன் (Institutional Credit)

கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கத்திலிருந்து பொருளாதாரம் மீண்டு வரும் சூழ்நிலையில், வங்கி அமைப்புகள் மூலம் வழங்கப்படும் கடன்

முறையாகக் கிடைக்கப் பெறுவது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஊரக மற்றும் நகர்ப்புர ஏழை மக்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியோருக்குச் சீராகவும், குறைந்த வட்டி விகிதத்திலும், நியாயமான நிபந்தனைகளுடன் கூடிய முறையான கடன் வசதி கிடைக்கும் பட்சத்தில், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களை அதிலிருந்து உயர்த்துவதற்கும், அதீத வறுமைக்கோட்டிற்குக் கீழே அவர்கள் செல்லாதவாறு தடுப்பதற்கு மேலும், தொழில் வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும். முறைசாரா அமைப்புகள் நெறிமுறையற்ற நடைமுறைகளைப் பின்பற்றி கடன் வழங்குவதைத் தடுப்பதற்கும் இந்த முன்னெடுப்பு மிகவும் அவசியமாகிறது. இந்நேர்வில், ஆண்டு கடன் திட்டத்தின்படி (Annual Credit Plan) சம்மந்தப்பட்ட வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்குவதை மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் நடத்தப்படும் வங்கியாளர்கள்

கூட்டங்களில் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் வறுமைக்கோட்டுக்குக் கீழே எந்தக் குடும்பமும் இல்லை என்ற தொலைநோக்கினைத் தமிழ்நாடு அடைய வேளாண்மை மற்றும் உழவர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் நிதி ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு தேவையான கடன் இணைப்புகளைக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகிறது.

### 3.4.10 மரபு மற்றும் பண்பாடு

தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள், நாட்டிலுள்ள பிற மாநிலங்களை விட அதிக நிதி ஒதுக்கீட்டுடன் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பண்டைய மதிப்புயர் பண்பாட்டினை மீண்டும் உருவகப்படுத்திப் புரிந்து கொள்வதற்கு இந்த நடவடிக்கைகள் உதவுகின்றன. சிவகளையில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளை Accelerator Mass Spectrometry முறையில் காலக்கணிப்பு ஆய்வு செய்து பகுப்பாய்வு ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை, பொருநை ஆற்றங்கரை நாகரீகம் ஏறத்தாழ 3,200 ஆண்டுகள் பழமையானது என்பதை நிரூபித்துள்ளது. ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை ஆகிய பகுதிகளில் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற பண்டைய பொருள்களை, நமது பண்பாட்டினைப் பறைசாற்றும் விதமாக நெல்லையில் அமையப்போகும் பொருநை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்த

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், கீழடி அகழாய்வுப் பகுதி திறந்தவெளி அருங்காட்சியகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 'தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்' எனும் தலைப்பில் ஆறு கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. திருமலை நாயக்கர் அரண்மனை - மதுரை, சார்ஜா மாடி- தஞ்சாவூர், டேனிஷ் கோட்டை - தரங்கம்பாடி ஆகிய பழங்காலக் கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறப்பு வாய்ந்த மரபுகளை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கீழ்க்கண்ட இடங்களில் முக்கியத்துவம் வாய்ந்த அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- கீழடி மற்றும் அதன் தொகுப்பு (மணலூர், அகரம், கொந்தகை) - சிவகங்கை மாவட்டம்

- ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை - தூத்துக்குடி மாவட்டம் மற்றும் கொடுமணல் - ஈரோடு மாவட்டம்.
- கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்.
- மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

இத்துறை, மரபு மற்றும் பண்பாட்டின் சிறப்புகளை வெளிப்படுத்தும் பணிகளான அகழாய்வு, அருங்காட்சியகங்கள், பாதுகாப்பு (Conservation) மதுரை கீழக்கரையில் ஜல்லிக்கட்டு அரங்கம், போன்ற பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன், தொடர்புடைய மற்ற துறைகளான, சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை, பொதுப்பணி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்யும்.

### 3.4.11. சுற்றுச்சூழல் சமநிலை

இந்தியாவின் தேசிய வனக் கொள்கை 1988-ன்படி மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், வனபரப்பு மற்றும் மரப்பரப்பை 33 விழுக்காடாக அதிகரிப்பது என்பது இந்த அரசின் முக்கிய தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றாகும். நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு-15-ன் படியும் (SDG - 15) 2030 வருடத்திற்குள் இந்த இலக்கு அடையப்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில், வனப்பரப்பானது 20.31 சதவீதமாக உள்ளது. உலகளாவிய மற்றும் தேசிய அளவில் நிர்ணயம் செய்யப்பட்ட 33 சதவீதம் பசுமைப் பரப்பு இலக்கினை அடைய மாநில அரசு தீவிரமாக முயற்சி மேற்கொண்டு வருகிறது.

2030ஆம் ஆண்டுக்குள் இந்த இலக்கை அடைய பல துறைகளின் கூட்டு முயற்சி மட்டுமன்றி மக்களின் பங்களிப்பும் அவசியமாகிறது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம்,

தமிழ்நாடு நதிப் பாதுகாப்பு திட்டங்கள், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், போன்ற அரசின் முக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆகிய பல்வேறு துறைகளின் திறன்மிக்க பங்களிப்பு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய அவசியமாகிறது. எனவே, அரசின் இந்த சீரிய நோக்கத்தினை விரைந்து அடையும் வகையில் பசுமைப் போர்வையின் பரப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்திடவும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் இப்பொருளை விவாதித்திடவும் இத்துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

### 3.4.12 தரவு நிர்வாகம் (Data Governance)

தரவு சார்ந்த நிர்வாகத்தில் நம்பகத்தன்மையைக் கையாளுதலும், பயனுள்ள

தரவுகளைச் சேகரித்தலும் அத்தரவுகளின் பாதுகாப்பினை உறுதி செய்தலும் முக்கிய செயல்பாடுகள் ஆகும். மேலும், சிறந்த தரவு சார்ந்த நிர்வாகம் என்பது தரவுகள் நிலைத்தன்மை கொண்டதாகவும் (Consistency) நம்பகத்தன்மை கொண்டதாகவும் மற்றும் அவை தவறாகப் பயன்படுத்தப்படாததை உறுதி செய்வதாகவும் இருத்தல் வேண்டும். தரவு சார்ந்த நிர்வாகம் கீழ்க்கண்ட கூறுகளை உள்ளடக்கியது.

- இது அரசின் நிர்வாக முடிவுகள் தரவுகளின் அடிப்படையில் (Data driven decision making) எடுப்பதற்கு உதவியாக இருத்தல்.
- தரவுகளைத் தூய்மைப்படுத்துதல் (Data Purity) மூலம் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் தகுதியானப் பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதி செய்தல்.

**தரவு சார்ந்த முடிவெடுத்தல்** (Data driven decision making): தரவுகள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையிலான நிர்வாகத்தில், அனைத்துத் துறைகளிலும் அரசு சரியான முடிவுகள் மேற்கொள்வதற்கு மட்டுமன்றி, அன்றாட நிர்வாகத்தில் தேவைப்படும் மாறுதல்களையும் மேற்கொள்ள இயலும்.

**தரவுகளைத் தூய்மைப்படுத்துதல்** (Data Purity): பல்வேறு துறைகளின் மூலம் திரட்டப்படும் தரவுகளின் நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் அரசுத் திட்டங்களின் பயன்கள் தகுதியுள்ள பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்ய இயலும். மேலும், தகுதியற்ற பயனாளிகளை நீக்குவதன் மூலம் அரசிற்குத் தேவையற்ற நிதி இழப்புகளைத் தடுக்க இயலும்.

இந்தத் துறையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) ஒருங்கிணைந்து பல்வேறு துறைகளின் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் அனைத்தையும்

ஒருங்கிணைத்து, பொதுமக்களுக்கு அனைத்துத் துறையினரும் பாரபட்சமற்ற மற்றும் விரைவான சேவை வழங்குவதை உறுதிசெய்கிறது. அனைத்து துறைகளின் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளை கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல் மாநிலத்தின் மின் ஆளுமை (e-Governance) முயற்சிகளை வலுப்படுத்தும்.

கருப்பொருள் கண்காணிப்புப் பகுதிகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முன்னெடுப்புகள் துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பது மட்டுமல்லாமல், இந்தத் திட்டங்களின் விரைவான முன்னேற்றத்திற்கும் உதவுகிறது.

மேலும், அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில், இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், இத்துறையால் 30 இளம் வல்லுநர்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வு திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதில் 24 இளம் வல்லுநர்கள், கருப்பொருள் அடிப்படையிலான

துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, கருப்பொருள் கண்காணிப்பு மற்றும் துறைசார் மதிப்பீட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கருப்பொருள் அடிப்படையிலானத் திட்டச்செயலாக்கத்தில் இலக்குகள் மற்றும் முழுமையானப் பலன்களை அடைவதற்குத் துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்புத் தேவைகளை கண்டறியும் பொறுப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கருப்பொருள் பகுதிகள் தொடர்பான ஒன்றிய அரசு, தேசிய மற்றும் சர்வதேச நிறவனங்களால் வெளியிடப்பட்ட துறை சார்ந்த அறிக்கைகளை ஆய்வு செய்து, தங்களுக்கு ஒதுக்கப்பட்டட துறைகளுக்கு பகுப்பாய்வு அறிக்கைகளை அளித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**3.5. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்**

கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ முதன்மைச் செயலாளர்கள்/ அரசுச் செயலாளர்களை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு அவ்வப்போது

நியமிக்கிறது. கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரைவாகச் செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், செயல்படுத்துவதில் ஏற்படும் இடையூறுகளுக்கானத் தீர்வுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர். அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு மாதமும் மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்படவேண்டிய திட்டங்களின் பட்டியல் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் அத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர்.

மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்டங்களில் அவசியமான இனங்களில்

துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டு முயற்சிகளை உறுதி செய்கின்றனர். மேலும் நிலம் கையகப்படுத்துதல் குறித்த சிக்கல்கள், மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்கின்றனர். இவற்றோடு மட்டுமல்லாது அந்த மாவட்டத்திற்கே உரிய சிறப்புத் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்கின்றனர். உயர் அளவில் அறிவுரைகள் வழங்கப்பட வேண்டிய இதர திட்டங்கள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டு திட்டங்கள் வாரியாக தங்களின் கருத்துக்கள் / குறிப்புகள் / பரிந்துரைகள் ஆகியவற்றை உரிய தொடர் நடவடிக்கைக்காக இத்துறைக்கு அனுப்புகின்றனர்.

மாவட்டங்களில் திட்டங்களின் செயல்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் / குறிப்புகள் / பரிந்துரைகள் கண்காணிப்பு

அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு இத்துறையில் ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் மீது அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது. அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்படும் இவ்வாய்வுக் கூட்டத்தில் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களால் மாவட்டங்களில் ஆய்விடப்பட்ட திட்டங்களின் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள், தொடர்புடைய துறைகளின் செயலாளர்களிடம் அளிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள், கண்காணிப்பு அலுவலர்களால் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட அளவில் அடையாளம் காணப்பட்ட இடர்பாடுகளுக்கு

உரிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் தகுந்த முடிவுகள் எடுப்பதற்கும் வாய்ப்பாக அமைகிறது.

**4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்னெடுப்புகள் :**

பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது மட்டுமல்லாது அரசின் சில தனித்துவ முன்னெடுப்புகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னெடுப்புகள், பொதுமக்களுக்கு அரசின் பல்வேறு துறைகள் மூலமாக வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அரசின் உயரிய நோக்கமான "எல்லோருக்கும் எல்லாம்" என்ற கோட்பாட்டினை நிறைவேற்றவும் உதவுகிறது.

**4.1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பாய்வுக் கூட்டங்கள்**:

**(அ) முத்திரைத் திட்டங்கள்:**

மாநிலத்தின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் செயல்படுத்தப்படும் பெரிய அளவிலானப் பயன்தரக்கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களை, குறித்த காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்கும் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் அத்திட்டங்களின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கவனத்துடன் கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது. அதன் மூலம் இத்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் பயன்கள் மற்றும் குறிக்கோள்களை உரிய காலத்தில் அடைய இயலும். பல்வேறு முக்கியத் துறைகளின் திட்டங்களான எரிசக்தி, குடிநீர் மற்றும் சுகாதாரம், தொழில் தடங்கள், டைடல் பூங்காக்கள், மேம்பாலம் அமைக்கும் திட்டங்கள், வெளிவட்டச் சாலைகள், பாலங்கள், பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் திட்டங்கள்,

போக்குவரத்து, தகைசால் பள்ளிகள், சுற்றுச்சூழல் திட்டங்கள், பல்நோக்கு மருத்துமனைகள், மீன்பிடி துறைமுகங்கள், நவீன அரிசி ஆலைகள், சேமிப்புக் கிடங்குகள், தகவல் தொழில்நுட்பத் திட்டங்கள், பாசனத் திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவை கூர்ந்தாய்வுக்காக உயர்நிலை கூட்டங்களில் முத்திரை திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முத்திரை திட்டங்களின் முன்னேற்றங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்திட முடிவு செய்யப்பட்டு, முதல் ஆய்வுக் கூட்டமானது 09.02.2023 மற்றும் 13.02.2023 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டங்களுக்கு உரிய ஏற்பாடுகளை செய்வது மட்டுமல்லாது கூட்டத்திற்குத் தேவையானக் குறிப்புகளையும், முன்னேற்ற அறிக்கைகளையும் இத்துறை தயாரிக்கிறது. இதுவரை 25 அரசுத் துறைகளில் 155 முத்திரைத்

திட்டங்கள் கண்டறியப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) முன்னுரிமைத் திட்டங்கள்:**

அரசு ஏராளமானத் திட்டங்களைப் பல்வேறு இனங்களின் கீழ் தொடர்புடைய துறைகளின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இதில் சுகாதார மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பு உருவாக்கம், வாழ்வாதார உயர்வு, அடிப்படை வசதிகள் அளித்தல், வீட்டுவசதி உருவாக்குதல் ஆகிய துறைகளில் நிதி ஒதுக்கீட்டின்படியும், பயனடைவோர் அடிப்படையிலும் சில முக்கியத் திட்டங்கள் "முன்னுரிமைத் திட்டங்கள்" என வகைப்படுத்தப்பட்டு உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதல் ஆய்வுக்கூட்டம் 13.03.2023 மற்றும் 15.03.2023 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் 24 துறைகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் 130

திட்டங்கள் முன்னுரிமைத் திட்டங்களாகத் தேர்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

**இ) மின்னாளுமைத் திட்டங்கள்:**

தொழில்நுட்ப வளர்ச்சியின் சாதகங்கள் கொண்டு அரசு நிர்வாகத்தினை மேம்படுத்துவது இன்றியமையாததாகிறது. தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பின் முன்னேற்றங்கள், தரவுகள் அடிப்படையிலான நிர்வாகத்திற்கு வாய்ப்பளிக்கிறது. இதன் காரணமாக, அரசுத் துறைகள் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளின் மூலம் தங்கள் துறைகளின் பல்வேறு நலத்திட்டங்களைத் தகுதியுள்ள அனைத்துப் பயனாளிகளுக்கும் தரமாகவும் விரைவாகவும் கொண்டு செல்ல இயலுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு துறைகளின் மின்னாளுமைத் திட்டங்களை ஆய்வு செய்ய முடிவு செய்துள்ளார்கள். இதன் மூலமாக, இத்தகைய மின்னாளுமைத் திட்டங்களின்

பலன்களை அத்துறைகளின் செயல்பாட்டுடன் விரைந்து ஒருங்கிணைக்க இயலும்.

**4.2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மண்டல அளவிலானக் கள ஆய்வுகள் "கள ஆய்வில் முதலமைச்சர்"**

கொள்கை அறிவிப்புகள் அனைத்தும் விரைவாக அரசாணைகளாக மாற்றப்பட்டு, அவைகளைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து, செயல்பாடுகளைக் கள ஆய்வுகள் மூலம் தொடர்ந்து கண்காணித்து, திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தாமதமின்றி உரிய மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல ஆய்வுக்கூட்டங்களில் வலியுறுத்தி வருகிறார்கள். அரசின் பல திட்டங்களின் முன்னேற்றத்தினை முறையாக ஆய்விடுதல் மட்டுமின்றி, அத்திட்டங்களின் செயலாக்கம் குறித்தும், பல நிலைகளில் நடத்தப்படும் கள ஆய்வுகள் மூலமாக மட்டுமே, மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களால் பெரிதும் வலியுறுத்தப்படும், "**மக்களை மையப்படுத்திய அரசு**" என்ற நிலையை அடைய இயலும்.

அரசின் உயர்நிலை ஆய்வினை கள அளவிலும் கொண்டு செல்லும் வகையிலான முன்னோடி திட்டமாக "**கள ஆய்வில் முதலமைச்சர்**" என்கிற புதிய முன்னெடுப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் மண்டல அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மண்டலமும் 4 முதல் 5 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

**ஆய்வுக் கூட்டங்கள்**: இத்திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்விடும் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களில் நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்த இதர மாவட்ட

அளவிலான அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கிறார். சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டமும் தொடர்புடைய மாவட்டங்களின் காவல்துறைக் கண்காணிப்பு அலுவலர்கள், அந்தந்தச் சரகங்களின் காவல்துறைத் துணைத் தலைவர், அம்மண்டலத்தின் காவல்துறைத் தலைவர் ஆகியோருடன் தனியே நடைபெறும்.

**கள ஆய்வுகள்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கள ஆய்வுகளை மேற்கொள்கிறார்கள். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் அம்மண்டலத்தின் தொடர்புடைய மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டத்திற்கு முந்தைய நாளில் விரிவானக் கள ஆய்வினை மேற்கொள்வதுடன் அக்கள ஆய்வின்போது

கண்டறியப்பட்ட குறைகளும், ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன. மேலும், தேவைப்படும் இடங்களில், கண்டறியப்பட்ட இடையூறுகளைக் களைவதற்குப் பொருத்தமானத் தீர்வுகளும் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட கூட்டங்களுக்குத் தேவையான விவரங்கள் மற்றும் தரவுகளைத் தொடர்புடைய துறைகளிடமிருந்து சேகரித்து அதன் அடிப்படையில் ஆய்வுக் குறிப்புகளைத் தயார் செய்யும் பொறுப்பு இந்தத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்பு தொடர்பான இனங்கள் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் ஆய்விடப்படுகின்றன.

- குடிமக்களுக்கு அரசு வழங்கும் அடிப்படை சேவைகள்
- வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி

- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- சமூக நலத் திட்டங்கள்
- வாழ்வாதாரத் திட்டங்கள்
- நகர்ப்புர மேம்பாடு
- பொது உள்கட்டமைப்பு
- மாணவர்கள் மற்றும் இளைஞர்கள்
- திறன் மேம்பாடு
- நில எடுப்பு தேவைப்படும் மாவட்டம் சார்ந்த திட்டங்கள் மற்றும் முத்திரைத் திட்டங்கள்
- மாவட்டத்திற்குரிய கொள்கை அறிவிப்புகளின் செயலாக்க நிலை

மேற்குறிப்பிட்ட இனங்களில் மாவட்ட அளவிலான செயலாக்க முன்னேற்றங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய உகந்த வகையில் விரிவான அறிக்கைகளை இத்துறை தயார் செய்யும். இந்த ஆய்வறிக்கைகள் மாவட்டங்களில் நன்கு செயல்படும் பகுதிகளைக் குறிப்பிடுவதுடன் மட்டுமல்லாமல் சிறப்பு கவனம்

தேவைப்படும் பகுதிகளையும் சுட்டிக்காட்டுகின்றன. இதன் மூலம், தொடர்புடைய மாவட்ட அலுவலர்களால் அப்பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, தேவைப்படும் திருத்தங்களை மேற்கொண்டு அப்பகுதிகளில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவும் உதவுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரை மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்களை 2023-ஆம் ஆண்டின் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், வேலூர், சேலம் மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டலங்களில் நடத்தியுள்ளார்கள். இதன் மூலம் 13 மாவட்டங்களுக்கான ஆய்வுகள் இதுவரை முடிவடைந்துள்ளன.

### 4.3 உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி எண்.110-ன் கீழ்

“**உங்கள் தொகுதியில் முதலமைச்சர்**” என்ற திட்டத்தினை அறிவித்தார்கள். சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்களின் நீண்ட காலத் தேவைகளை முன்னுரிமைப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது 22.08.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் மக்களின் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத பத்து முக்கியமானக் கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இத்திட்டத்தில் நெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் உள்ள உடனடித் தேவைகளான குடிநீர் மற்றும் நீர் ஆதாரத்தை மேம்படுத்தக்கூடிய கட்டமைப்பு வசதிகள், வேளாண் உற்பத்தியைச் சந்தைப் படுத்துவதற்குரிய பணிகள், இணைப்புப் பாலங்கள்

மற்றும் சாலைகள், மருத்துவ வசதிகள், பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்ற புதிய கல்வி நிறுவனங்கள் அல்லது தற்போதுள்ள கல்வி நிறுவனங்களில் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகள், தொழில் வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய கட்டமைப்பு வசதிகள், மின் மயானங்கள், நவீன நூலகங்கள், நகர்ப்புரங்களில் ஒருங்கிணைந்த நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள் மற்றும் புதிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பணிகளைப் பரிந்துரை செய்திட கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

இத்திட்டச் செயலாகத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் 28.09.2022 அன்று வெளியிடப்பட்டன. அவ்வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைப் பட்டியல்களை ஆய்வு செய்திட ஒவ்வொரு

மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட பணிகள்/திட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்து, அப்பணிகள் எடுத்துக்கொள்வதற்குரிய விரிவான சாத்தியக் கூறுகளை ஆராய்வார்கள். மேற்குறிப்பிட்ட சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மாவட்ட அளவிலான குழுவில் பணிகள் / திட்டங்கள் ஒவ்வொன்றும் பரிசீலிக்கப்பட்டு தோராய மதிப்பீட்டுத் தொகையுடன் கூடிய பரிந்துரை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேற்கண்டவாறு துறைவாரியாகத் தொகுக்கப்பட்ட பணிகள் / திட்டங்களைச்

சம்மந்தப்பட்ட துறைகளின், நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் செயல்படுத்திடுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்திட ஏதுவாக அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் "கூர்ந்தாய்வு குழு" கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | அரசுத் தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை | உறுப்பினர் |
| 3. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | உறுப்பினர் |
| 4. | அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் செயலர் |

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு அனுமதி வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு மாநில

அளவிலான "**அனுமதி வழங்கும் உயர்நிலைக்குழு**" அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் | உறுப்பினர் |
| 3 | மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் | உறுப்பினர் |
| 4 | அரசு தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| 5 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 6 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை. | உறுப்பினர் |
| 7 | அரசு முதன்மைச் செயலாளர்,<br>சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை | உறுப்பினர்<br>செயலர் |
| 8 | பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பணிகளுக்குத் தொடர்புடைய துறை சார்ந்த அரசுச் செயலாளர்கள். | உறுப்பினர் |

மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட பிரேரணைகள் துறை வாரியாக தொகுக்கப்பட்டு,

அப்பிரேரணைகளைத் தொடர்புடைய துறைகளுடன் இணைந்து பரிசீலித்து, அவற்றை மாநில அளவிலானக் குழுவின் பரிசீலனைக்கு வைத்திடுதல் மற்றும் அனுமதி வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் ஒருங்கிணைப்புத் துறையாக இத்துறை செயல்படும். தற்பொழுது, “உங்கள் தொதியில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட பிரேரணைகளை உரிய துறைகளுக்கு அனுப்பி, முடிவு செய்து, செயல்படுத்திட ஏதுவாக ஒருங்கிணைக்கும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.4. தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம்

மாநில அரசின் பல முக்கிய மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு தொழில் மற்றும் கல்விப் பின்புலத்தைச் சார்ந்த இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், தமிழ்நாடு

முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக, அரசாணை (பல்வகை) எண். 3, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தேதி: 04.03.2022-ன் கீழ் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் (2022-24) என்கிற திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய ஆணையினை அரசு பிறப்பித்தது. இதன்படி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது இத்திட்டத்திற்கானத் தொடர்புத் துறையாகவும், திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது கல்விப் பங்காளராகவும் அறிவிக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தைச் (2022-24) செயல்படுத்த அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது இளம் வல்லுநர்களைத் தேர்வுச் செய்யும் தொடர்பு முகமையாகும். அதன்படி, தமிழ்நாடு

முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின்கீழ் மூன்று கட்டத் தேர்வுகளின் வழியே புத்தாய்வு வல்லுநர்களைத் தெரிவு செய்யும் பணியினை அந்நிறுவனம் மேற்கொண்டது. வலுவான, வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் இந்தத் தேர்வு நடத்தப்பட்டது. இதன் மூலம் தேர்வான 30 நபர்களின் இறுதிப் பட்டியல் 05.09.2022 அன்று வெளியிடப்பட்டது. தேர்வானப் புத்தாய்வு வல்லுநர்களுக்கு மாதம் ரூ.65,000/- ஊதியமும் ரூ.10,000/- கூடுதல் படியும் வழங்கப்படுகிறது.

புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட புத்தாய்வு வல்லுநர்களுக்கு சென்னையிலுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையுடன் இணைந்து நோக்குநிலைப் பயிற்சி வழங்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட புத்தாய்வு வல்லுநர்களுக்கான நோக்குநிலைப் பயிற்சியை 29.09.2022 அன்று

சென்னையிலுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடக்கி வைத்தார்கள். புத்தாய்வு வல்லுநர்கள் தங்களுடைய 30 நாள் பயிற்சியை 31.10.2022 அன்று நிறைவு செய்தனர்.

நோக்குநிலைப் பயிற்சி நிறைவடைந்த பின்னர், தேர்வாகியிருந்த 30 புத்தாய்வு வல்லுநர்களில் 24 வல்லுநர்கள் கருப்பொருள் அடிப்படையிலானக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்டு, கருப்பொருள் சார்ந்த துறைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆறு வல்லுநர்கள் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கண்காணிப்புப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர். கருப்பொருள் அடிப்படையில் புத்தாய்வு வல்லுநர்களுக்குப் பின்வரும் கடமைகளும் பொறுப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன.

- கருப்பொருள் அடிப்படையிலான துறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு முயற்சி தேவைகளை அடையாளம்

கண்டு அதன் வழியாகக் கருப்பொருள் இலக்குகளை அடைதல்.

- ஒன்றிய அமைச்சகங்கள், தேசிய மற்றும் பன்னாட்டு முகமைகள் வெளியிடும் பிரிவு வாரியான அறிக்கைகளை கருப்பொருள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து அவற்றை அவர்கள் இணைக்கப்பட்ட துறைகளுக்கு வழங்குதல்.
- பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான சிறப்பான நடைமுறைகளை ஆராய்ந்து, அவற்றைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கானப் பொருத்தமான வழிகளைப் பரிந்துரைத்தல்.
- வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை ஆராய்ந்து அவற்றில் செயல்படுத்தக்கூடிய வகையிலான புதிய மற்றும் மாற்று முறைகளை அடையாளம் காணுதல்.

- தற்போது செயல்பாட்டில் உள்ள முக்கிய / முத்திரைத் திட்டங்களின் செயலாக்கத்தினைக் கண்காணிக்க உதவி செய்தல்.
- தற்போது நடைமுறையிலிருக்கும் மின்னாளுமை முன்னெடுப்புகளை ஆராய்ந்து அவற்றை மேலும் பயன்பாட்டுக்கு உகந்த வகையில் மாற்றுவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிதல்.
- மின்னனு சேவைகளின் செயலாக்கத்தை ஆராய்ந்து சேவைகள் பொது மக்களுக்குச் சென்றடைவதையும், வழங்கப்படும் சேவைகள் பயன்படுத்தப்படுவது குறித்தும், தொடர்ந்து கண்காணிப்பதற்கு உதவுதல்.
- களப்பணியில் கண்டறிந்த விவரங்கள் மற்றும் அதன் தொடர்பான அறிக்கைகளை அவ்வப்போது அளித்தல்.

- அவ்வப்போது ஒதுக்கப்படும் பணிகளைச் செய்தல்.

புத்தாய்வுத் திட்ட வல்லுநர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் அவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் துறையில் அவர்கள் மேற்கொண்ட பணிகளை மாதாந்திர அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும்.

கல்விப் பங்காளராக விளங்கும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளும்.

- புத்தாய்வுத்திட்ட வல்லுநர்களுக்கு ஒரு கல்விசார் வழிகாட்டி பயிற்றுநரை நியமித்தல்.
- இணைய வழி அல்லது நேரடி வகுப்புகள் மூலம் பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில் கல்விசார் உள்ளீடுகளைத் தொடர்ந்து வழங்கி வல்லுநர்களின் திறனை மேம்படுத்துதல்.

- குறிப்பிட்ட கால இடைவெளியில் அவர்களுடைய செயல்பாடுகளை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் ஒவ்வொரு இளம் வல்லுநருக்கும் தேவைப்படும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- போட்டி மனப்பான்மையைப் புகுத்துவதன் வழியாக வல்லுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.

இந்த இரண்டு வருடத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் புத்தாய்வு வல்லுநர்கள், கல்விப் பங்காளரிடமிருந்து "பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்" முதுகலைச் சான்றிதழ் பெறுவர். மேலும், முதுநிலைப் பட்டங்கள் பெற்றுள்ள புத்தாய்வு வல்லுநர்களுக்கு பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் முனைவர் பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியைப் பெற்றிருக்கும்பட்சத்தில் அதற்கு அந்நிறுவனம் வாய்ப்பு வழங்கும்.

**4.5 கள ஆய்வு அலுவலர்கள்** (Field Nodal Officers)

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது, அரசின் கண்காணிப்பு அமைப்பின் முதன்மை பணியாகிய, தொடர்புடைய துறைகளிடமிருந்து தரவுகளைப் பெற்று, கொள்கை அறிவிப்புகளின் செயலாக்க நிலை குறித்து கண்காணிக்கும் பணியினைச் செய்து வருகிறது. துறைகள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில், அவ்வப்போது நடத்தப்படும் முக்கியமான ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற நிலை அறிக்கைகள் மற்றும் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்கான பகுப்பாய்வு அறிக்கைகள் ஆகியனவற்றை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை தயார் செய்து வருகிறது.

மாவட்ட அளவில் கண்காணிப்புச் செயல்முறையை மேலும் வலுப்படுத்திட, துணை ஆட்சியர்/உதவி இயக்குநர் நிலை அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் ஒவ்வொரு

மாவட்டத்திலும் கள ஆய்வு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கள ஆய்வு அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருவன:

- ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் மாதந்தோறும் குறைந்தபட்சம் 4 நாட்கள் அல்லது அரசின் ஆணைக்கேற்ப கள ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.
- ஆய்வு செய்வதற்கென அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய வேண்டும்.
- ஆய்வின்போது, கள ஆய்வு அலுவலர்கள், நலத்திட்டங்களின் கீழ் பயனடையும் பல்வேறு பயனாளிகளின் உண்மைத் தன்மை மற்றும் நடைபெற்று வரும் பணிகளின் உண்மை நிலையை சரிபார்த்திட வேண்டும். மேலும், தற்செயலாகக் கண்டறியப்பட்டவை

ஏதேனும் இருப்பின், அவை குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

- திட்டங்கள் அனைத்தும் நடைமுறையிலுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகளின்படி செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பிற பகுதிகளில் செயல்படுத்திட ஏதுவாக, அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் அளவில், அதிக தரமானதாகவும், துரிதமாகவும் செயல்படுத்தப்பட்ட சிறப்பான நடைமுறைகள் எவையேனும் கள அளவில் பின்பற்றப்பட்டால், அவற்றை ஆவணப்படுத்த வேண்டும்.
- திட்டச் செயலாக்கத்தில் முறைகேடுகள், சிக்கல்கள், இடையூறுகள் ஏதேனும் இருப்பின், அது குறித்து அறிக்கையளிக்க வேண்டும். இவ்வறிக்கை, அவற்றை

சரிசெய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கும்.

- ஆய்வுப் பணியின்போது எந்தவிதப் சார்புமின்றி நடுநிலையுடன் நடந்துகொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு ஆய்வின் நிறைவிற்குப் பிறகும், கள ஆய்வு அறிக்கைகளை உடனடியாக அனுப்பிட வேண்டும்.

கள ஆய்வு அலுவலர்கள் ஆய்வு செய்வதற்கானத் திட்டங்கள் அவ்வப்போது ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், கள ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெறப்படும் ஆய்வறிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தொடர்புடைய துறைகளுக்கு உரிய தீர்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு பெறப்படும் பின்னூட்டங்களும், கருத்துகளும் அறிக்கையாக அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தொடர்புடைய துறைகளுடன் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களில்

ஆய்வு கூட்டப் பொருளாகச் சேர்க்கப்பட்டு விவாதிக்கப்படும்.

**4.6 மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுகள்**:

சென்னை தலைமைச் செயலகத்தில் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 முதல் 12 ஆம் தேதி வரை நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய கள ஆய்வுகளின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அரசு துறைகளின் மூலமாக மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களையும், மாணாக்கர்களுக்கும், நலிவடைந்த பிரிவினருக்கும் வழங்கப்படும் பல்வேறு உதவிகளையும் உரிய தரத்தில் கிடைப்பதை உறுதி செய்யுமாறும், கள ஆய்வுகளின் அடிப்படையில் தேவைப்பட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும்

மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இதன் காரணமாக, கள ஆய்வுகளின் முக்கியத்துவம் மாநில அளவில் ஒரு வலுவானக் கண்காணிப்பு அமைப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது. மாவட்டங்களில் பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் மற்றும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகக் கள ஆய்வுகளைக் கண்காணிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு மாதமும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட மாவட்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் பல திட்டங்களின் மீதான கள ஆய்வு அறிக்கைகள் குறிப்பிட்ட படிவத்தில் இத்துறையில் பெறப்படுகிறது. மாவட்டங்களிலிருந்து பெறப்படும் இந்த ஆய்வு அறிக்கைகள் ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்பட்டு, விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அரசுத்தலைமைச் செயலாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்தப் பகுப்பாய்வு அறிக்கைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக மாவட்ட வாரியானக் குறிப்புகளுடன் தலைமைச் செயலாளர் அவர்களால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கடிதம் அனுப்பப்படுகிறது. இது மட்டுமல்லாமல் தலைமைச் செயலாளர் அவர்களால் குறிப்பிட்ட கால இடைவெளியில் மாவட்ட ஆட்சியர்களுடன் காணொளிக் காட்சிகளின் மூலம் நடத்தப்படும் ஆய்வுகளிலும் இப்பொருள் குறித்து விவாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட அலுவலர்களால் நடத்தப்படும் கள ஆய்வுகள் சீராக முன்னேற்றம் அடைந்துள்ளன.

# II. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

## 1. முன்னுரை

நாட்டிலேயே தமிழ்நாடு சமச்சீரானத் தொழில் வளர்ச்சியையும் பல்வேறு உற்பத்தித் துறைகளில் வளர்ச்சியையும் கொண்டுள்ள சில மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் தயாரித்தல், மருந்துப் பொருட்கள், பொறியியல் சாதனங்கள், ஆடைகள், உரம், தோல் மற்றும் நெகிழிப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் முதலிடம் வகிக்கின்றது. தமிழ்நாடு மின்வாகனங்கள், நிதித் தொழில்நுட்பம் (Fin Tech), பெருந்தரவு (Big Data), மெய்நிகர் தொழில் நுட்பம் (Meta Verse), மேம்பட்ட உற்பத்தி முறை, பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தி போன்றவற்றில் அதிக முதலீடுகளைப் பெற்று வருகின்றது.

மேலும் நமது மாநிலம் அதிக எண்ணிக்கையிலான (15.07 விழுக்காடு) குறு, சிறு, நடுத்தர தொழில் முனைவோர் (MSME)-களை உள்ளடக்கியுள்ளது. இதன்மூலம் மிகப்பெரும் அளவிலான தொழிலாளர்களின் இருப்பிடமாக அமைந்துள்ளது. தொழில் உற்பத்தித் திறன் மற்றும் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) பங்களிப்பு ஆகியவற்றைத் தக்க வைத்துக் கொள்ளவும், அதனை மேம்படுத்துவதற்கும் அதிக திறன் கொண்ட மனிதவளத்தை உருவாக்குவதும் ஏற்கெனவே உள்ள பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதும் அவசியமாகிறது. இதுமட்டுமின்றி, மாநிலத்தின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குக் கல்லூரி படிப்பை முடித்துப் பணியமர்த்த தயார் நிலையிலுள்ள திறமையான மாணவர்களைத் தொழிற்சாலைப் பணிகளுக்கு ஏற்றவாறு தயார்படுத்துதல் அவசியமாகிறது. இதுவே அரசுக் கொள்கைகளின் அடிப்படை உந்து சக்தியாகவும்,

பல்வகைத் திறன் சார்ந்த முயற்சிகளுக்கும் இடையேயான தொடர்பை உண்டாக்குவதாகவும் உள்ளது.

மாநிலத்தின் மக்கள் தொகை, மிகவும் தொழில்மயமானப் பொருளாதாரத்தை ஒட்டிய மறுதிறனளித்தலுக்கானத் தேவை, சமூக நீதி, சமச்சீரான வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் முன்னுரிமைகளில் ஒன்றாகத் திறன் மேம்பாடு திகழ்கிறது.

தமிழ்நாடு பல மரபுசார் கலைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. இந்தப் மரபுசார் கலைகளைக் பேணிப் பாதுகாக்கவும் மேலும் இதிலிருந்து பொருளாதார பலன்களைப் பெறுவதற்கு உதவும் வகையிலும் இந்த மரபுசார் கலைகளில் ஈடுபட்டுள்ள மக்களின் நவீன வடிவமைப்படத் திறன், நிதி மேலாண்மை குறித்த புரிதல் மற்றும் சந்தைத் தொடர்புகளை விரிவாக்குவது போன்றவற்றில் பயிற்சி அளிப்பது அவசியமாகிறது.

தமிழ்நாட்டின் சராசரி நடு வயது 34 வருடங்கள் என்ற அளவில் தேசிய நடுசராசரியான 28 வருடங்களைவிட அதிகமாக உள்ளது. இந்த சராசரி நடு வயதானது, 2036-ல் 41 வருடங்களாக உயரக்கூடும். (ஆதாரம்: MOHFW – சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், இந்திய அரசின் இந்திய மற்றும் மாநில மக்கள் தொகையின் 2011-2036 இடைபட்ட ஆண்டுகளுக்கானத் தொழில்நுட்ப அறிக்கை) எனவே, மக்கள் தொகையின் ஈவுப்பங்கினை முழுமையாகப் பெறுவதற்கு பலநிலைகளில் உடனடியாகத் திறன்களை வளர்க்க வேண்டியுள்ளது.

இளைய சமுதாயமே தமிழ்நாட்டின் அரிய செல்வமாகும். மாணவர்கள் அவர்களின் அடிப்படைத் திறமைகள் மற்றும் தனித்துவமானத் திறன்களின் அடிப்படையில் வளர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார்ந்த வாழ்க்கையில் உன்னத நிலை அடைய முடியும்.

திறன்மிக்க தொழிலாளரைக் கொண்டே நல்லிணக்கம் மற்றும் சமச்சீரான வளர்ச்சியை கொடுக்க இயலும். தமிழ்நாடு, உயர்கல்வியில் நாட்டிலேயே மிக உயர்ந்த அளவிலான மொத்த நுழைவு விகிதமான (GER - Gross Enrollement Ratio 51.42%) கொண்டுள்ளது. இது தமிழ்நாடு மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புகளில் விருப்பம் கொண்டுள்ளதையும் அதன் மூலம் உயரிய பணிகளை அடைய வலுவான இலட்சியம் கொண்டுள்ளனர் என்பதையும் குறிக்கின்றது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவர்கள் தங்களின் தொழில் மற்றும் வேலைவாயப்புக்கான வழித்தடங்களைத் தேர்வு செய்வதற்கும் மேலும் தேர்வு செய்த தொழில் முறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்முறைத் திறன்களை வளர்த்திட வழிகாட்டுதலும் அவசியமாகிறது.

### 1.1 திறனளித்தல், உயர் திறன் அளித்தல் மற்றும் மறுதிறன் அளித்தலுக்கான தேவை

அதிவேகமானத் தொழில்நுட்ப மாறுதல் மற்றும் வருங்கால பணிகளில் புதிய திறன் தேவைகள் என்பது திறன் இடைவெளி அதிகமாவதன் அறிகுறியாகும். கணினி மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் போன்றவை, திறன் இடைவெளியை இணைக்கும் முக்கிய உந்து சக்தியாக உள்ளன. உயரிய திறன் திட்டங்களை ஊக்குவிக்க கணினி மயமாக்கலில் உள்ள (Digital) இடைவெளியை குறைக்க வேண்டும். எதிர்க்கால வேலைவாயப்புகளுக்கு மென்திறன் முக்கியமானதாகும். தொழில்நுட்ப மாற்றத்தில், தற்போதுள்ள தொழில்களில் அதி வேக மாறுபாடு காரணமாக பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதும் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாக உள்ளன.

தமிழ்நாடு அரசு, தொழில் துறைகள், கல்வி நிலையங்கள் மற்றும் பயிற்சி வழங்குநர்களோடு

மிகுந்த முனைப்புடன் இணைந்து பணியாற்றி அனைவருக்கும் மேம்பட்ட திறனை அளிப்பதற்கான முன்னெடுப்புகளை தொடங்கி உள்ளது. வளர்ந்து வரும் திறன்களான எந்திரவியல் (Robotics), செயல்முறைத் தானியக்கம் (Process Automation), மேகக் கணிமை (Cloud Computing), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திர வழிக்கற்றல் (Machine Learning), இணையப் பாதுகாப்பு (Cyber Security) போன்றவை மாறி வரும் தொழில்நுட்ப உலகின் வேகத்திற்கு ஏற்ப பணியாளர்களின் திறன்களைப் பெருக்கிட வேண்டியுள்ளது. மாறுபடும் திறன் தேவைகள், திறன் பயிற்சிக்கு அதிக செலவு செய்யும் நிலை மற்றும் இலக்குடன் கூடிய பயிற்சித் திட்டங்களின் பற்றாக்குறை போன்றவற்றை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, திறன், உயர் திறன் மற்றும் மறு திறன் ஆகியவைகளை இளைஞர்களுக்கு

சென்றடையும் நோக்கில் திறனுக்கான கொள்கையினை வகுத்துள்ளது.

தற்போதைய இளைஞர்களிடம் தனி நபர்களுக்கு இடையேயான தொடர்புத்திறன் மற்றும் தகவல் தொடர்புத்திறன் போன்றவற்றை அதிகரிக்க வேண்டியுள்ளது. இவற்றின் தேவையினைப் பல்வேறு துறைகளில் பணி வழங்குநர்கள், குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. தொழில் துறைகளின் தேவைக்கேற்ப, தமிழ்நாட்டு இளைஞர்களின் மென்திறன் மற்றும் பணித்தேவை திறன் ஆகியவற்றை மேம்படுத்த இலக்கு நோக்கிய முன்னெடுப்புகள் தேவைப்படுகின்றன.

## 1.2 தமிழ்நாட்டில் திறன் மேம்பாட்டின் தற்போதைய நிலை

இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலம்

வளர்ந்துவரும் பொருளாதாரத்தை எதிர்கொள்ளவும், சமூக நீதியை உறுதி செய்யவும் உயரிய தரமுள்ள மனிதவளத்தை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு முனைந்துள்ளது. எனவே, இளைஞர்களின் விருப்பத்தையும் தொழில் வளர்ச்சியையும் சமநிலைபடுத்துவதன் மூலம் தொழிலாளர்களுக்கானத் தேவை மற்றும் இருப்பை சரி செய்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவ முடியும்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் திறன்கள் யாவை என்பதைக் கூர்ந்து கவனித்து, அதே வேளையில், இளைஞர்கள் விருப்பப்படும் தொழில்களுக்கேற்ப அனைத்து திறன் பயிற்சிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அனைவரும் பயன்பெறும் விதமாகத் திறன் பயிற்சி தரும் பல்வேறு துறைகள், கூட்டாக ஒருங்கிணைத்து செயல்படுவதே சரியானத் தீர்வாக அமையும்.

## 2. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநிலத்தில் திறன்பயிற்சி பெற்ற மனிதவளத்தை அதிகரித்து, தொழிற்சாலைகளின் திறன் தேவைகளைப் நிறைவு செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பானது 2009-ல் திறன் பயிற்சி அளிக்கும் இயக்கமாக உருவாக்கப்பட்டது. மேலும் இது இலாப நோக்கமற்ற அமைப்பாக கம்பெனிச் சட்டம், பிரிவு 8-ன் கீழ் 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) திறன் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (Nodal) முகமையாக அறிவிக்கப்பட்டு, மாநிலத்தில் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தனது இணையதளத்தின் மூலம் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைகளால் நடத்தப்படும் அனைத்துத் திறன் பயிற்சிகளையும் ஒருங்கிணைக்கிறது. திறன்

பயிற்சித் திட்டங்களைத் தரப்படுத்துவது, மாவட்ட வாரியாக அரசு மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களை அடையாளம் காண்பது, மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குவது ஆகியவற்றில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கவனம் செலுத்துகின்றது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வளர்ந்து வரும் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப திறன் பயிற்சிகளை உருவாக்கும் வகையிலும், வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையிலும், முறையான மற்றும் முறைசாராக் கல்வி பயின்றவர்களுக்கு உள்ள திறன் இடைவெளியைக் குறைப்பதற்கும் திறன்பயிற்சி வழங்குகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப திறன் பயிற்சிமுறையினை மாற்றியமைக்க கவனம் செலுத்துகிறது. தொழில் துறை சார்ந்த திறன் பயிற்சிகளை வழங்க தொழில்துறை நிறுவனங்களைத் திறன்

பயிற்சியாளர்களாக இணைக்கும் முனைப்பில் செயல்பட்டுவருகிறது.

**2.1 தேசியத் திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) மற்றும் NSQF அல்லாத பணிப் பிரிவுகள் :**

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுக்கான ஒன்றிய அரசு வகுத்துள்ள பொதுவிதிகளின் படி, மாநில மற்றும் தேசிய அளவில் சீரான பாடத்திட்ட தர அளவீடுகளை உருவாக்க, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தேசிய திறன் தகுதி கட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் இதர அளவீடுகளானப் பாடப்பிரிவின் காலம், தர நிலை, மதிப்பீட்டு முறை மற்றும் கட்டண முறைகளைப் பின்பற்றுகிறது. தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (National Skill Development Corporation - NSDC) அறிவிக்கப்பட்டுள்ள திறன் தகுதி தொகுப்புகளில் வெற்றிகரமாகப் பயிற்சி பெற்ற மற்றும் சான்றளிக்கப்பட்ட மாணவர்களில் குறைந்தபட்சம் 70 சதவீத மாணவர்களுக்கு

வேலை வாய்ப்ப்பு வழங்குவதை உறுதி செய்கிறது.

தற்போது உறுதியான வேலை வாய்ப்புடன் கூடிய தொழில்துறை தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட திறன் பயிற்சிகளை வழங்க கவனம் செலுத்தப்படுகிறது. அதற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தேசியத் திறன் கட்டமைப்பு தரநிலை அல்லாத, தொழில் சார்ந்த திறன்களை வேலை வாய்ப்பு மற்றும் சான்றிதழுடன் கூடிய பயிற்சித் திட்டங்களை வழங்க சுலபமான அணுகுமுறையைக் மேற்கொள்கிறது. கல்லூரிகள் மற்றும் வேலையற்ற இளைஞர்களுக்குத் தொழில் சம்பந்தப்பட்ட படிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பெரிய பன்னாட்டு நிறுவனங்களும் பயிற்சியாளர்களாக இணைக்கப்படுகின்றனர்

## 2.2 பயிற்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் சான்றளித்தல்

பயிற்சியின் தரத்தை உறுதி செய்யும் வண்ணம், தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) கீழுள்ள துறை சார்ந்த திறன் வளர்ச்சி குழுமம் (Sector Skill Council- SSC) மற்றும் மாநிலத் தொழிற்பயிற்சி குழுமம் (State Council for Vocational Training - SCVT) மூலம் திறன் மதிப்பீடுகள் மற்றும் அங்கீகாரம் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் நடுநிலையான மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களில் அதிக அளவிலானப் பயிற்சியாளர்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு, சான்றளிக்கும் மற்றும் மதிப்பீடு செய்யும் நிறுவனமாகத் தம் சொந்த அடையாளத்தை நிறுவும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

**2.3 பயிற்சி வழங்குநர்களுக்கான அங்கீகாரம் அளித்தல்:**

சிறந்த பயிற்சி நிறுவனங்களைக் கண்டறிந்து அவர்களைத் தேர்வு செய்வதற்குத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (TNSDC) கருத்துரு விண்ணப்பம் (Request for Proposal - RFP) வெளியிடப்படுகிறது. ஆர்வமுள்ள நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்து, உட்கட்டமைப்பின் தரத்தினை உறுதிசெய்தபின், உள் மதிப்பீட்டுக் குழுவால் விருப்ப அறிக்கைகள் (Expression of Interest-EoI) மதிப்பீடு செய்யப்படுகின்றன. தகுதியுள்ள நிறுவனங்கள் மாநில அளவிலான தலைமைக் குழுவின் (State Level Apex Committee – SLAC) ஒப்புதல் பெற்ற பின்னர் பயிற்சி நிறுவனங்களாக

அங்கீகரிக்கப்படுகின்றன. முன்னணித் தொழில் நிறுவனங்கள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் (MNCs), பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் சிறப்பு அங்கீகார வழிமுறை (Green Channel) மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**2.4 2022-23 ல் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விபரங்கள் (மார்ச் 2020-23 வரை)**

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் உள்ள வேலை வாய்ப்புகளின் அடிப்படையில் இளைஞர்களுக்குப் பல்வேறு துறைகளின் கீழ் 2022-2023 ஆம் ஆண்டிற்கானக் குறுகிய காலத் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மண்டல வாரியாக, பயிற்சி பெற்ற பயனாளர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## 2.4.1 மண்டல வாரியாக பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள்

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சென்னை | செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் | 7573 |
| 2 | மத்திய மண்டலம் | அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, , திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம் | 12090 |
| 3 | வடக்கு மண்டலம் | திருவண்ணாமலை, ராணிப்பேட்டை , வேலூர் ,விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர் | 10521 |
| 4 | மேற்கு மண்டலம் | சேலம் ,நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர் | 11131 |
| 5 | தெற்கு மண்டலம் | திருநெல்வேலி ,தூத்துக்குடி,விருதுந | 12033 |

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | | கர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை கன்னியாகுமரி | |
| மொத்தம் | | | 53348 |

## 2.4.2 துறைவாரியாகப் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள்

| வ.எண் | துறை | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தளவாடங்கள் | 9774 |
| 2. | மேலாண்மை | 8073 |
| 3. | ஆயத்த ஆடை | 7661 |
| 4. | சுகாதாரம் | 6080 |
| 5. | தானியங்கி | 3858 |
| 6. | தோல் மற்றும் தோல் பொருட்கள் | 2839 |
| 7. | மூலதனப் பொருட்கள் | 2391 |
| 8. | வேளாண்மை | 1646 |
| 9. | தகவல் தொழில் நுட்பம் | 1553 |
| 10. | மின்னனுவியல் மற்றும் வன்பொருள் | 1402 |
| 11. | மற்ற துறைகள் | 8071 |
| | **மொத்தம்** | **53348** |

### 3. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் - இணைய முகப்பின் சிறப்பு அம்சங்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வெளிப்படையான மற்றும் பயன்பாட்டுக்கு உகந்த அம்சங்களுடன் கூடிய இணைய முகப்பானது (www.tnskill.tn.gov.in) திறன் பயிற்சி சூழல் (Skilling Ecosystem) அமைப்பின் அனைத்து அளவீடுகளையும் (Parameters) கண்காணிக்கும் மையப்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

தரமானப் பயிற்சி மற்றும் பயிற்சித் திட்டத்தை சுமூகமாகச் செயல்படுத்துவதை உறுதி செய்யும் தகவல் களஞ்சியமாக இது செயல்படுகிறது. திறன்களை மேம்படுத்தி வேலைவாய்ப்பினைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்து, பயிற்சி வகுப்பையும், பயிற்சி மையத்தையும் தேர்வு செய்து கொள்ளலாம்.

பயிற்சி நிறுவனங்கள்/ பயிற்சி மையப் பட்டியல், பயிற்சியாளர் வகுப்பு உருவாக்கம் மற்றும் இலக்கு நிர்ணயம் செய்தல், பயிற்சியாளர்

வகுப்பு ஆய்வு, வருகைப் பதிவு, பொது நிதி மேலாண்மை அமைப்பு (Public Financial Management System - PFMS) முறை மூலம் பணம் செலுத்துதல், பணியமர்த்தலின் நிலவரம் போன்றவை முற்றிலும் இணையவழியில் நடைபெறுகிறது. பங்கேற்பாளர்கள் அனைவரும் ஆதார் அட்டையின் மூலம் சரிபார்க்கப்பட்டு, போலி பதிவு இல்லாமல் இருப்பதை உறுதி செய்யப்படுகிறது. ஆய்வு மற்றும் மதிப்பீடானது தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (National Skill Development Corporation – NSDC) தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் (National Skill Qualification Framework - NSQF) அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி செயல்படுத்தப்படுகிறது. மேலும் கைபேசி மூலமாக நிலக்குறியீடு (GEO Taging) தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வு செய்யும் வசதியும் கொண்டுள்ளது.

இந்த இணைய முகப்பானது பயன்பாட்டாளருக்கு ஏற்ற வகையில்,

வெளிப்படையாகவும் மற்றும் வசதியாகவும் தகவல்களை எளிதில் பெற பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

- மாணவர் பதிவு
- பயிற்சி வழங்குநர் / பயிற்சி மைய அங்கீகாரம்
- ஆதார் இணையத்துடன் ஒருங்கிணைப்பு (UIDAI)
- கைபேசி செயலி மூலம் நிகழ்நேர ஆய்வு
- பயிற்சித் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- e-KYC மூலம் இணைய வழி நிதி வழங்கல்
- ஒருங்கிணைக்கப்பட்ட பொது நிதி மேலாண்மை அமைப்பு ( PFMS)
- மதிப்பீடு முகமை பதிவு செய்தல்
- நிகழ்நிலையில் (Online) சான்றிதழ் வழங்கல்

- திறன் தொகுப்பு பதிவேடு (Skill Registry)
- ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வருகை பதிவு முறை (AEBAS)
- ஒருங்கிணைந்த தரவு சேமிப்பகம் (Digi Locker)
- பணியமர்த்தல் கண்காணிப்பு முறை
- மனிதவள நிர்வாக அமைப்பு ( HRMS)
- ஒன்றிய மற்றும் மாநில இணையமுகப்புகளுடன் செயலி நிரலாக்க இடைமுகத்தை ( Application Programming Interface) ஒருங்கிணைத்தல்
- மேலாண்மைத் தகவல் அமைப்பின் (MIS) தகவல் மற்றும் அறிக்கை

### 3.1 தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஒருங்கிணைந்த திறன்பதிவு தரவுதளம்

ஒருங்கிணைந்த திறன் பதிவு தரவுத்தளமானது மாநிலத்தில் உள்ள அனைத்து திறன் பயிற்சித் திட்டங்கள் தொடர்பான

தரவுகளை அளிக்கும் தீர்வு தளமாக உள்ளது. தொழில் துறையினரின் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒருங்கிணைந்த தகவல் களஞ்சியமாக இது செயல்படும். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் தனியார் துறை வேலைவாய்ப்பு இணைய தளத்துடன் (Private Job Portal - PJP) ஒருங்கிணைந்து செயல்பட தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழிவகை செய்கிறது. அனைத்துத் திறன் பெற்ற பயனாளிகளின் தரவுகள் தனியார் துறை வேலைவாய்ப்பு இணைய தளத்துடன் சேர்க்கப்படுகின்றன. தற்போது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட நபர்களின் தரவுகள் செயலி நிரலாக்க இடைமுகம் (Application Programming Interface – API) மூலமாக நிகர்நிலையில் தனியார் வேலைவாய்ப்பு இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் நிகழ்நேரத்தில், பயிற்சி பெற்ற நபர்கள் இந்த வேலைவாய்ப்பு இணைய முகப்பில் சேர்க்கப்படுகின்றனர். மாநிலத்தில் உள்ள அனைத்து துறைகளின் திறன் பயிற்சி தரவுகளும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தத் தரவுகள் திறன் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த முறையானது தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற நபர்களின் பணிவாய்ப்புகளை அதிகப்படுத்துகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல்வேறு துறைகளின் கீழ் இயங்கிவரும் 37 தொழில் பிரிவுகளில் பயிற்சி பெற்ற 1,61,138 மாணவர்களின் விவரங்களை ஒருங்கிணைத்துள்ளது.

**4. உலகத் திறன் போட்டிகள் 2022**

திறன் போட்டிகள், திறன் மிக்கவர்களை ஊக்குவிக்கிறது. ''இந்தியத் திறன் போட்டி''

எனப்படும் தேசியத் திறன் போட்டி 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது. மாநில அளவிலானத் திறன் போட்டியில் வெற்றி பெறுவோர், மண்டல அளவிலான போட்டியிலும். பின்னர் தேசிய அளவில் இந்திய திறன் போட்டியிலும் பங்கேற்கின்றனர்.

06.01.2022 முதல் 10.01.2022 வரை நடைபெற்ற தேசிய அளவிலான இந்தியத் திறன்கள் 2021 இறுதிப் போட்டியில் தமிழ்நாடு சார்பில், மொத்தம் 36 பேர் கலந்து கொண்டனர். மேலும், இவற்றில் நமது மாநிலத்தைச் சேர்ந்த 23 பேர் பதக்கங்கள் பெற்றுள்ளனர். அவற்றுள் 2 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள், 8 வெண்கலப் பதக்கங்கள் மற்றும் 5 சிறப்புப் பதக்கங்கள் உள்ளடங்கும். தமிழ்நாடு, இந்தியத் திறன்கள் 2021 பதக்கப் பட்டியலில் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது. நமது மாநிலம் 23 பதக்கங்களை வெல்வது இதுவே முதல்

முறையாகும். விருது பெற்றவர்கன் 14.3.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரொக்கப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகத் திறன் 2022 போட்டிகளில் இந்தியத் திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர் கீழ்கண்டவாறு பதக்கங்கள் வென்று நமது மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

| வ. எண் | திறன் | போட்டியாளர் பெயர் | பதக்கம் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | விடுதி உபசரிப்பு (Hotel Reception) | அனுஸ்ரீ சீனிவாசன் | வெண்கலம் | சுவிட்சர் லாந்து |
| 2. | ஆபரணங்கள் செய்தல் (Jewellery) | சுபாசிஸ் பால் | சிறப்பு பதக்கம் | சுவிட்சர் லாந்து |
| 3. | சுகாதாரம் மற்றும் சமூக நலன் பேணுதல் (Health and Social Care) | சரஸ்வதி PV | சிறப்பு பதக்கம் | பிரான்ஸ் |

நடப்பு ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில திறன் போட்டிகள் ஏப்ரல், 2023 இல் தொடங்கப்படும், மாநிலப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு நமது மாநிலத்திற்கு மேலும் பல விருதுகளைக் கொண்டு வருவதற்காக உலகம் முழுவதும் உள்ள சிறந்த மையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

**5. முன் கற்றலின் அங்கீகாரம்** (Recognition of Prior Learning - RPL)

முன் கற்றலின் அங்கீகாரம் (RPL) என்பது அனுபவத்தின் மூலம் பெற்றத் திறனை அங்கீகரித்தல் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது கட்டுமானத் துறையில் பணிபுரியும் முறைசாராத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதால், முன் கற்றலை அங்கீகரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன, தளவாடங்கள், சிறுதொழில், தோல் மற்றும் நெசவுத் துறைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் பெற தகுதி உண்டு.

இதுவரை 1,11,371 நபர்களுக்குத் திறன் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மரபுசார் கலை மற்றும் கைவினைப் பொருட்களில் கைவினைஞர்களுக்கான புதிய திட்டம் நடப்பாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரகப் பகுதிகளில் சமுதாயத் திறன் பள்ளிகளை (Community Skill Schools) நிர்வகிக்கும் தொழில் முனைவோருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்குத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சான்றிதழ் வழங்கும்.

### 6. வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP)

வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (Skill Acquisition Knowledge Awarness Livelihood Program - SANKALP) திறன் மேம்பாட்டிற்கான

நிறுவன வழிமுறைகளை வலுப்படுத்தவும், நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்குத் தரமான மற்றும் சந்தை சார்ந்த பயிற்சி கிடைக்கச் செய்யவும் தொடங்கப்பட்டது.

தேசிய மற்றும் மாநில அளவில் நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தை உலக வங்கி நிதியுதவி மற்றும் மத்திய, மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதத்திலான நிதியில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த முதல் ஆண்டில் ரூ.20.30 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கூறுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மொத்த வரவு-செலவுத் திட்டம் பின்வருமாறு:

| வ.எண் | செயல்பாடுகள் | ஒன்றிய மற்றும் மாநில பங்கு உட்பட மொத்தமாக வழங்கப்பட்ட தொகை (in.Rs) |
|---|---|---|
| 1. | கூறு 1 - உயர்தர சந்தை தொடர்பான பயிற்சியைத் திட்டமிடுதல், வழங்குதல் மற்றும் கண்காணிப்பதற்காக தேசிய மற்றும் மாநில அளவில் நிறுவனங்களை வலுப்படுத்துதல். | 9,23,00,000 |
| 2. | கூறு 2 - திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட தரம் மற்றும் சந்தைத் தொடர்பு. | 8,57,20,000 |
| 3. | கூறு 3 - பெண் பயிற்சியாளர்கள் மற்றும் பிற பின்தங்கிய குழுக்களுக்கான மேம்பட்ட திறன் பயிற்சியை நிறைவு செய்தல். | 2,50,00,000 |
| | **மொத்தம்** | **20,30,20,000** |

### 6.1 மாவட்ட அளவில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகியவற்றுடன் இணைந்து 31 மாவட்டங்களில் 49 மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தியது. மாநிலம் முழுவதும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதற்கு ரூ.124.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.,

### 6.2 மகப்பேறுக்குப்பின் தொழில் மற்றும் வேலைவாய்ப்பற்ற பெண்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையம் ஆகியவற்றுடன் இணைந்து 38 மாவட்டங்களில் மகப்பேறுக்குப் பின்பு வேலை இடைவெளியில் இருக்கும்

பெண்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதலை வழங்குவதற்கு இத்திட்டம் நடத்தப்பட்டது.

ரூ.32.00 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 15,287 பெண்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

## 6.3 சங்கல்ப் (SANKALP) திட்டத்தின் கீழ் திருநங்கைகளுக்கான ஊக்கத் தொகையுடன் கூடிய, திறன் பயிற்சி வாய்ப்புகள்:

சங்கல்ப் (SANKALP) திட்டத்தின் கீழ் திருநங்கைகளின் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கருத்தில் கொண்டு 14 திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பு திறன்பயிற்சிகளும், 30 திருநங்கைகளுக்கு இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டுநர் திறன் பயிற்சிகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

## 6.4 விளிம்பு நிலை சமுதாயங்களுக்கான சிறப்பு முன்னெடுப்புகள்:

- ❖ இந்தப் பயிற்சித் திட்டம் நலிவடைந்த கலைகளை, மேற்கொண்டு வரும் கலைஞர்கள் கைவினைப் பொருள் கலைஞர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த விளிம்புநிலை சமூகங்களின் கீழ் வரும் விண்ணப்பதாரர்களின் முன்னேற்றத்தினை மட்டுமே கவனம் செலுத்துகிறது.
- ❖ பயிற்சித் திட்டங்களின் விவரம் வருமாறு:

| வ. எண் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நீலகிரி மாவட்டத்தில் பின்தங்கிய பழங்குடியினருக்கு லாந்தனா மரச்சாமான்கள் தயாரித்தல். | பழங்குடி மக்கள் | 50 |
| 2 | வாழை நார் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி, மதுரை | பிற்படுத்தப்பட்ட / ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள், விதவைகள் மற்றும் கிராமப்புற பெண்கள் | 50 |

| வ. எண் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 3 | நீலகிரி மாவட்டத்தின் பழங்குடியின இளம் பருவத்தினருக்கான சுகாதார கல்வி மற்றும் மென் திறன்கள் திட்டம் | 6 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான இளம்பருவ பழங்குடியின அரசுப் பள்ளி மாணவர்கள் | 500 |
| 4 | திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கைவினைஞர்களுக்கான மேம்பட்ட திறன் பயிற்சி | அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கைவினைஞர்கள் | 50 |
| 5 | கன்னியாகுமரி கிராமப்புற மீனவப் பெண்களுக்குத் தேங்காய் ஓடு நகை மற்றும் கைவினைப் பயிற்சி | மீனவப் பெண்கள் | 50 |
| 6 | பாய் பின்னுதல் திறன் பயிற்சி பத்தமடை மற்றும் வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம் | பத்தமடை பாய் நெய்திடும் பெண்கள் | 70 |
| 7 | தென்காசி மாவட்டம் சிவசைலம் இயற்கை சாயம் தயாரித்தல் திறன் பயிற்சி | பீடி தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் | 30 |
| 8 | திருவள்ளூர் மாவட்டம், புலிகாட் பகுதி பனை ஓலை நெய்தல் திறன் | பெண் நெசவாளர்கள் | 40 |
| 9 | தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கடலில் மீன்பிடி படகு இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் மீனவர்களின் பாதுகாப்புப் பயிற்சி | மீனவர்கள் | 100 |

| வ. எண் | பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 10 | LED விளக்கு தயாரிக்கும் பயிற்சி | பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் | 30 |
| மொத்தம் | | | 970 |

**6.5 மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வாழ்வாதார மையம்** (Differently Abled Livelihood Centre DELC):

- மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் (DELC) என்பது ஒரு புதுமையான திட்டமாகும், இது மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார வாய்ப்புகளை நெறிப்படுத்துவது மற்றும் அதிகப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநில மாற்றுத் திறனாளிகள் துறை ஆணையருடன் இணைந்து, அந்த ஆணையத்தின் தலைமையகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை

வாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையத்தை (DELC) நிறுவி செயல்படுத்தி வருகிறது.

- இத்திட்டமானது, தமிழ்நாடு திறன் மேபாட்டுக் கழகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குனருடன் (DWDA) இணைந்து ரூ.2.22 கோடி செலவில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

**6.6 திறன் தகுதியும் மற்றும் வேலைவாய்ப்பு சந்தைக்கு உகந்த நிலையும்:**

**பயிற்சியாளர்களுக்கானப் பயிற்சி:**

பயிற்சியாளர் பற்றாக்குறையைப் போக்கவும், பயிற்றுவிப்புத் திறனை மேம்படுத்தவும் 1,200 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது பயிற்சியாளர்களின் திறன் இடைவெளியை நிரப்பிட, தரமானப் பயிற்சியாளர்களை உருவாக்கும். 765 பயிற்சியாளர்களுக்கு ஆயத்த ஆடைகள், சுகாதாரம், தானியங்கி, தோல், மின்னணுவியல், நீர் மேலாண்மை மற்றும் குழாய்

அமைப்புப் பணி, மூலதனப் பொருட்கள் மற்றும் வேளாண்துறை ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

**மதிப்பீட்டாளர்களுக்கானப் பயிற்சி:**

மதிப்பீட்டாளர்களின் பற்றாக்குறையை போக்கிடவும், மதிப்பீட்டாளர்களின் தரத்தை மேம்படுத்தவும் 300 மதிப்பீட்டாளர்களுக்கு மதிப்பீட்டாளர் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி மதிப்பீட்டாளர்களின் திறன் இடைவெளியை நிவர்த்தி செய்து மதிப்பீட்டாளர்களின் தரத்தை மேம்படுத்தும். இத்திட்டத்தின் கீழ் 14 மதிப்பீட்டாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பல பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுவருகின்றன.

**6.7 முன்னேற விழையும் மாவட்டங்களில் திறன் பயிற்சி:**

திறன் மேம்பாட்டில் பின்தங்கியுள்ள

விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் திறன் மேம்பாட்டிற்காக சங்கல்ப் (SANKALP) திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.16.67 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில், 220 மீனவர்களுக்கு இயந்திர படகு பழுதுபார்ப்பு பயிற்சி, வாழ்வாதாரப் பயிற்சி (சுகாதார பெட்டகம் மற்றும் மெழுகுவர்த்தி தயாரித்தல்), மற்றும் சணல் மூலம் பாய் தயாரித்தல் பயிற்சிகள் வழங்கப்பட்டன . மேலும் விருதுநகர் மாவட்டத்தில் 40 நபர்களுக்கு கதிர்வீச்சு தொழில்நுட்பம் (X-ray) மற்றும் இரத்தக் கழிவகற்றல் தொழில்நுட்பப் (Dialysis) பயிற்சி அளிக்கப்பட்டது.

## 6.8 தொழில் முனைதல் மற்றும் பணி தகுதியாக்கத்திற்கான தொழில்முறை ஆயத்தநிலை திட்டம்:

அண்ணா பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஐ.சி.டி அகாடெமி, நாஸ்காம் மற்றும் ஐ.பி.எம் நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறை திறன்களுக்கானப் பயிற்சியளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கால அளவானது 6 மாதங்களாகும். இதில் மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), தரவு அறிவியல் (Data Science) மற்றும் இணைய வழிப் பயன்பாடு (Internet of Things), ஆகிய துறைகளில் நிகழ்நேரத் திட்டத்தில் பணிபுரிவது குறித்து கற்றுக்கொண்டனர். இது கட்டாய மதிப்புக்கூட்டப்பட்ட சிறப்புத் படிப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் பயிற்சித் திட்டமானது பொறியியல் கல்லூரிகளில் 6-வது

பருவநிலை மாணவர்களுக்கானது. இந்தத் திட்டத்தின் கீழ் அண்ணாபல்கலைக் கழகத்தின் கல்லூரியைச் சேர்ந்த 53,718 மாணவர்களும் 5,350 ஆசிரியர்களும் பயன் அடைந்துள்ளனர். மேலும் அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**7. தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TNASDC)**

சுகாதாரம், கட்டுமானம், வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு, ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோமொபைல் வாகன உதிரி பாகங்கள், தளவாடங்கள் (Logistics) போன்ற துறைகளில் உயர்தரத் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் உயர் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு

நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் பங்கு ரூ.50 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.50 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் தற்போதைய பயிற்சி நிலவரம்**

- ❖ தொழில் துறை தொடர்பான மேம்பட்ட உயர்தர திறன் பயிற்சிகளை வழங்குதல்.
- ❖ தொழிற்சாலைகளுடன் இணைந்து பாடத்திட்டத்தை மேம்படுத்துதல்.
- ❖ வழிகாட்டுதல்களைப் பின்பற்றி துறை சார்ந்த படிப்புகளை மேம்படுத்துதல்.
- ❖ பல தொழில் துறைகளிலும் போதிய பயிற்சி பெற்ற மனிதவளம் கிடைப்பதை உறுதி செய்வதற்காகப் பிற நிறுவனங்களின் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளித்தல் (Training of Trainers -ToT).

❖ பயிற்சித் திறனை மேம்படுத்த தற்போதுள்ள உள்கட்டமைப்பு மற்றும் மனிதவளத்தைத் திறம்பட பயன்படுத்த அரசு / அரசுசார்பு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.

❖ தொழில் பழகுநர் பயிற்சி பெறுபவர்களுக்குத் தொழிற்சாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் மற்றும் இதர தொழில் சார்ந்த பயிற்சிகளுடன் இணைந்து பணியாற்றல்.

❖ வெளிநாட்டுக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி பாடத் திட்டங்களை உருவாக்குதல்.

❖ தொழிற்சாலைகளின் உள்கட்டமைப்பு வசதியுடன் தேவையானத் திறன் பயிற்சி வழங்கி, திறன் தேவையைப் பூர்த்தி செய்தல்.

## 7.1 தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் பயிற்சி நிலை

| TNASDCs | இந்த ஆண்டில் பயிற்சி பெற்ற மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 2022 – 2023 |
|---|---|
| தமிழ்நாடு திறன் மேம்பாட்டு மையம்- சுகாதார நலன் | 18771 |
| தமிழ்நாடு – போக்குவரத்து மற்றும் தளவாடங்களுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம். | 15957 |
| தமிழ்நாடு- வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீட்டுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம் (பி.எஃப்.எஸ்.ஐ). | 13076 |
| தமிழ்நாடு- ஆட்டோ, ஆட்டோ உதிரிபாகங்கள் மற்றும் இயந்திர கருவிகளுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம். | தொடங்கப்படவுள்ளது |
| தமிழ்நாடு- கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்புக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம். | தொடங்கப்படவுள்ளது |

**8. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சிறப்பு திட்டங்கள்:**

- தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்து வரும் 10-வது, 12-வது மற்றும் பட்டப்படிப்பை முடித்தவர்களின் வேலைவாய்ப்பு தேவைகளை நிறைவு செய்திட அழகுக்கலை பயிற்சி, தையல் பயிற்சி, வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் மோட்டார் மெக்கானிக் போன்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகப் பயிற்சி வழங்குநர்கள் மூலம் அளிக்கப்படுகிறது.

- சட்டக் கல்லூரி மாணவர்களுக்குத் தொழில் முறையிலான ஆங்கிலத் திறன் பயிற்சிகள் கடந்த ஆண்டு முன்னோட்ட அடிப்படையில் 3 மாவட்டங்களில், 280 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து,

இந்த ஆண்டு 14 சட்டக் கல்லூரிகளில் 2920 மாணவர்களுக்கு மேலாண்மை & தொழில்முனைவு மற்றும் தொழில்முறை துறை திறன் குழுமத்துடன் இணைந்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

- ❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின் மூலம் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக மாவட்ட வாரியாக உள்ள இலங்கை தமிழர்களுக்குத் திறன் பயிற்சி அளித்திடும் வகையில் 32 மாவட்டங்களில் உள்ள 2890 பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்

மூலம் அனைத்து வகை சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்புக்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சிறையிலுள்ள தண்டனை மற்றும் விசாரணைக் கைதிகள் 20 நபர்களுக்கு விடுதலைக்குப்பின் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் 2022-23ம் ஆண்டு 2500 இளைஞர்களுக்குச் செடிகளின் ஒட்டுதல் முறை, பதியம் போடுதல் முறை, கிளை கத்தரித்தல் முறை, பசுமைக் குடில் பராமரித்தல், நுண்நீர்ப் பாசன அமைப்பு பராமரித்தல், தோட்டக்கலை இயந்திரங்கள் இயக்குதல், வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்குதல் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளைப் பழுது நீக்குதல் போன்ற பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு முன்னெடுப்பாக, மாற்றுத் திறனாளிகளுக்கானத் திறன் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது, இத்திட்டத்தில், இந்திய மென்பொருள் சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பான நாஸ்காம் (National Association of Software and Services Companies - NASSCOM) உடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா இணைய வழித் திறன் பயிற்சி வழங்குகிறது. தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் ஒவ்வொரு மாற்றுத் திறனாளிப் பயனாளிக்கும், பயிற்சியின் போது தனிநபர் வழிகாட்டுதல் வழங்க வசதிகள் ஏற்படுத்தித் தருகின்றன. பயிற்சியின் முடிவில், பயிற்சி பெற்ற ஒவ்வொருவருக்கும் நாஸ்காம் நிறுவனம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. மேலும் இத்திட்டத்தின்மூலம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால்

100 மாற்றுத்திறனாளிகளுக்குத் திறன் பயிற்சி பழகுவதற்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**9. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்:**

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4-ன் படி அனைத்து ஆண்களும், பெண்களும் குறைந்த செலவில் தரமான தொழில் நுட்ப மற்றும் தொழில் கல்வி பெறுவதை உறுதி செய்திட, பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைத் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத் தரங்களின் அடிப்படையில் (NSQF) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கட்டணமின்றி வழங்கி வருகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4.4-ன் வழிகாட்டுதல்படி தமிழ்நாடு அரசானது பல முன்னணித் துறைகளில் திறன் பயிற்சி திட்டங்களை அளிப்பதோடு மட்டுமல்லாமல் கணிசமானத் திறன் வாய்ந்த மனித வளத்தை அதிகரிக்க பிற திறன் பயிற்சித் திட்டங்களான

PMKVY, சிறுகுறு மற்றும் நடுத்தர துறைக்கான (MSME) திறன் பயிற்சி, உயர் திறன் மேம்பாட்டுக் கழகங்கள்(ASDC), SIEMENS நிறுவனத்துடன் இணைந்து நடைபெறும் பல்நோக்குத் திறன் மேம்பாட்டு மையம் (MSDC), உயர்திறனுக்கான பயிற்சி திட்டங்களின் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. முன்னணித் துறைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டம் (Pradhan Mantri Kaushal Vikas Yojana) போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் திறன் பயிற்சி, ஐந்து துறைகளில் திறன் மேம்பாட்டு மையம், பல்திறன் மேம்பாட்டு மையம் (MSDC), SIEMENS ஆகியன திறன் பெற்ற மனித வளத்தை கணிசமாக அதிகரிக்க உயர்தர திறன் பயிற்சி அளிக்கும் மையங்களாகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4.4.1-ன் படி குறுகிய கால பயிற்சியில் சான்றிதழ் பெற்ற இளைஞர்களின் விகிதாச்சாரத்தை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், ஏற்கனவே உள்ள திறன் பெற்ற நபர்களை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்க முன் கற்றலுக்கு அங்கீகாரம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

**10. நான் முதல்வன்**

'நான் முதல்வன்' என்பது தமிழ்நாடு அரசின் மாபெரும் திறன் மேம்பாட்டு முன்னெடுப்பாகும். திறன் சார்ந்த பயிற்சிகளை அளிக்கும் ஒருங்கிணைப்பு தளமாக இது தொடங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான தகுதிகள், திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை மாணவர்களுக்கு வழங்கும் பாடத்திட்டங்கள் கல்லூரிப் பருவத்திலேயே சிறந்த பயிற்சி நிறுவனங்களின் மூலம் திறன் பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கும் விதமாக இத்திட்டம்

வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், வேலையளிப்பவர்கள் தங்களது நிறுவனம் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள திறன் இடைவெளியைச் சரி செய்ய தேவையான திறன்களுக்கானப் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளிக்கவும், இத்திட்டம் வழிவகை செய்கிறது.

'நான் முதல்வன்', மாணவர்களுக்கு அவர்கள் வேலை செய்ய விரும்பும் தொழில் மற்றும் துறைகளுக்குப் பொருத்தமான திறன் படிப்புகளை வழங்குகிறது. இந்த படிப்புகள் மாநிலம் முழுவதும் 18-35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்காக வழங்கப்படுகின்றன. தேசிய மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ் பெற்ற பயிற்சி வகுப்புகள், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலமாக வளர்ந்து வளரும் தொழில்நுட்பத் துறை, உற்பத்தி, சுகாதாரம், ஊடக மற்றும் பொழுதுபோக்கு, பசுமை சார்ந்த வேலைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும்

தொழில்நுட்பம் சார்ந்த வேலைகள், வணிகம், அழகியல், கட்டுமானம், மின்னணுவியல் மற்றும் மின்னணுச் சாதனங்கள், உணவுப் பொருட்கள் தயாரித்தல், போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்கப்படுகிறது.

**10.1 தொலைநோக்குப் பார்வை:**

மாநிலத்தில் திறன் மேம்பாட்டு முயற்சிகளை முறைப்படுத்தி, வளர்ந்து வரும் சந்தைத் தேவைக்கு ஏற்ப திறன் பயிற்சி அளிப்பது மட்டுமின்றி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்து, இந்தியாவிலும், உலக அளவிலும் மாறிவரும் தொழில் சூழலில் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் கற்றலுக்கு அவர்களைத் தயார்படுத்துதல். மேலும், தமிழ்நாட்டு மாணவர்கள் அவர்கள் விரும்பும் திறன் பயிற்சிகளைப் பெற வாய்ப்புகளையும், நிலையான வேலைவாய்ப்பை பெறுவதற்கான வழிமுறைகளையும் தொடர்ந்து அளித்தல்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களுக்கு விருப்பமான திறன்களை வளர்த்துக் கொள்ளவும், நிலையான வேலைவாய்ப்புகளை பெறவும் தொடர்ந்து வாய்ப்புகளை உருவாக்கித்தருதல்.

**10.2 குறிக்கோள்:**

திறன் மேம்பாடு தொடர்பான தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் முயற்சிகளை ஒன்றிணைத்து இவற்றைத் தொலைநோக்குடனும் ஒருங்கிணைந்த முன்னெடுப்புகளுடனும் தேவையான அளவில் வழங்குதல் பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் முன்னெடுப்புகளை ஊக்குவித்து, வணிக நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வையும் (Corporate Social Responsibility - CSR) இணைத்து வேலைவாய்ப்பை அளிக்கக் கூடிய திறன் பயிற்சிகளை வழங்குதல்.

**10.3 திட்டத்தின் நோக்கம்:**

நான் முதல்வன் திட்டம் மூன்று முக்கிய குறிக்கோள்களுடன் தொடங்கப்பட்டுள்ளது.

- ❖ மாணவர்கள் பொருத்தமானத் தொழில் பாதைகளை அடையாளம் காணவும், பொருத்தமானத் திறன்களை மேம்படுத்த அறிவு சார்ந்த பயிற்சியை அணுகவும், வேலை வாய்ப்புகளைப் பெறவும் உதவுதல்.
- ❖ மாணவர் பதிவு, தகுதி சோதனை, ஆவண மேலாண்மை, பாடப் பரிந்துரை, பயிற்சி மேலாண்மை மற்றும் பாடச் சான்றிதழ்கள் போன்ற மேலாண்மை தொடர்பான அத்தியாவசியப் பணிகளைக் கல்லூரிகளுக்கு எளிதாக்குதல்.
- ❖ தொழில் நிறுவனங்கள் தங்களது உள்ளுறைப் பயிற்சி, தொழிற்பழகுநர் பயிற்சி, பயிற்சித் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்பு முன்னெடுப்புகள் மூலம்

திறன் தொகுப்பை உருவாக்கி, அதன் பயன்பாட்டை உறுதி செய்தல்.

## 10.4 மாணவர்களுக்கான வாய்ப்புகள்

- ❖ தொழில்நிறுவனம் சார்ந்த திறன் பயிற்சிகள், தொழில்நுட்பத் தனித்திறமைகள் மற்றும் நிறுவனம் சார்ந்த திறன்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- ❖ சர்வதேச புகழ்பெற்ற பல்கலைக்கழக நிறுவனங்களுடன் இணைந்து ஆங்கில மொழிப்பயிற்சியை கல்லூரியில் மாணவர்களுக்கு வழங்குதல்.
- ❖ அனைத்து மாணவர்களுக்கும் தொழில்சார்ந்த படிப்புகளைப் பயிலும் வாய்ப்பளிக்க, புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்களைப் பயிற்சி அளிக்கும் இணைய வழி தளத்தின் ஒரு பகுதியாக இணைத்தல்.

- பல்கலைக் கழக, கல்லூரி நிபுணர்கள் மற்றும் உலகளாவிய தொழில் துறை வல்லுநர்கள் மூலம் மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

- ஆசிரியர்களுக்குத் தேவையான மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகள் ஆகியவற்றைத் தரமான கல்விச்சூழல் மூலமாக அளித்து, நாளைய தலைவர்களை முறையாக உருவாக்குதல்.

### 10.5 கல்லூரிகளுக்கான வாய்ப்புகள்

- தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து திறன்பயிற்சிகளை வழங்குதல்.

- குறைந்த கட்டணத்தில் தொழில்நுட்ப கல்விச் சான்றிதழ்கள் வழங்குதல்.

❖ ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை நடத்தி அவர்களைத் தொழிற்சாலைக்கு உகந்த பயிற்றுநர்களாக உருவாக்குதல்.

❖ கல்லூரி வளாகத்தில் திறன் சார்ந்த முயற்சிகளை ஏற்படுத்துதல்.

❖ உயர் தொழில்நுட்பத் துறைகளின் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

❖ இணையவழி பயிற்றுவித்தலை மேம்படுத்துதல்.

❖ தொழில் மேம்பாட்டுப் பட்டறைகள்/ தொழிற் நிறுவனங்களை பார்வையிடுதல்

❖ இணைய வழி பாடங்களைக் கற்க ஏற்ற இணைப்பை ஏற்படுத்துதல்.

❖ நிரலோட்டத்தில் (Hackathon) பங்கேற்க வாய்ப்பு ஏற்படுத்துதல்

## 10.6 தொழிலகங்களுக்கான வாய்ப்புகள்

- தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வித் துறையையும் இணைக்கும் ஒரு புகழ்பெற்ற மற்றும் சக்திவாய்ந்த அமைப்பு.
- உள்ளிருப்புப் பயிற்சி, வேலைசார்ந்த பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கானப் பயிற்சி பெற்ற பணியாளர்களின் தொகுப்பு.
- வேலை வாய்ப்பு முகாம்களில் பங்குபெற ஏதுவாக ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பம் / திறன் பகுதிக்கான படிப்புகள் / கற்றல் உள்ளடக்கத்தை தேவைக்கேற்ப மாற்றத் தகுந்த வகையில் வழங்குதல்
- திறன் இடைவெளிகளைக் குறைக்க, பயிற்சிகளைத் தேவைக்கேற்ப சுலபமாக வடிவமைப்பது.
- அரசாங்கத்துடன் இணைந்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான

உள்ளீடுகளைப் பகிர்ந்து கொள்ளும் அமைப்பு

## 10.7 பொறியியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம்

தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகளின் கீழ், 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் பொறியியல் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு மேம்பாடு மற்றும் திறன் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் முதன்மையான நோக்கம் 21 ஆம் நூற்றாண்டின் உலகளாவிய தொழில்துறை தேவையை கருத்தில் கொண்டு மாணவர்களை மேம்படுத்துவதாகும். நமது மாணவச் சமுதாயத்திற்கு உரிய திறன்களை உறுதி செய்யும் வகையில் கல்லூரி பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2023-ஆம் கல்வியாண்டில் 11 தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து 19 பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த பருவத்திற்கு 23 பாடப்பிரிவுகள், 15

தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் கற்றல் மற்றும் திறன் பெறும் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு முறையான திறன்களை உறுதி செய்ய தொழில்துறையில் திகழும் நடப்புகள் தொழில்துறை பயன்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**10.7.1 பொறியியல் கல்லூரி முதல்வர்கள் மற்றும் நேரடி தொடர்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு திட்டக் குறிக்கோளை உணர்த்துதல்**

செப்டம்பர் 12 முதல் 16, 2022 வரை ஏழு பிராந்திய மையங்களில் அனைத்து பொறியியல் கல்லூரி முதல்வர்கள் மற்றும் நேரடித் தொடர்பு அலுவலர்கள் (Single Point of Contact) க்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

### 10.7.2 பயிற்றுநர்களுக்கானப் பயிற்றுவிப்பு மேம்பாட்டுத்திட்டம்

அக்டோபர் 2022 இல் 6986 பொறியியல் பேராசிரியர்களுக்கு 2022-23 ஆம் கல்வியாண்டில் ஒற்றை எண் (Odd) பருவத்திற்கானப் பேராசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program - FDP) நடத்தப்பட்டது.

பிப்ரவரி 2023ல் 5596 பொறியியல் ஆசிரியர்களுக்கு 2022-23 கல்வியாண்டின் இரட்டை(Even) பருவத்திற்கான ஆசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program) நடத்தப்பட்டது

### 10.7.3 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கானப் பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துதல் (முக்கியப் புள்ளி விவரங்கள்)

- ❖ பதிவுசெய்யப்பட்ட பொறியியல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 483 ஆகும்.

❖ பதிவு செய்யப்பட்ட பொறியியல் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 4,94,258 ஆகும்.

❖ அங்கீகரிக்கப்பட்ட தொழில்துறை பயிற்சி வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும்.

❖ கட்டாய திறன் படிப்புகளின் மொத்த எண்ணிக்கை 42 ஆகும்.

**10.7.4. 2022-2023 கல்வியாண்டில் ஒற்றைப் பருவங்களுக்கானத் திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விபரம்**

| வ.எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Office Fundamentals | 82287 |
| 2. | Communicative English | 72974 |
| 3. | Project Based Learning – AI,ML, FS, IOT | 53718 |
| 4. | Machine Learning (Mech.) | 24207 |
| 5. | Big Data | 9572 |
| 6. | Cloud Essentials | 8678 |

| வ.எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 7. | Electric Vehicle (Mech) | 6970 |
| 8. | Full Stack | 5926 |
| 9. | Robotics simulation (Hybrid) | 4397 |
| 10. | Electric Vehicle (EEE) | 4278 |
| 11. | Other Courses | 32145 |
| | **மொத்தம்** | **305152** |

**10.7.5. 2022-2023 கல்வியாண்டில் இரட்டைப் பருவநிலைகளுக்கானத் திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விபரம்**

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Network Essentials | 32000 |
| 2. | Professional Readiness for employment | 24547 |
| 3. | Robotic Process & Industrial Automation | 16795 |
| 4. | Smart & Advanced Manufacturing – Design Simulation | 12024 |

| வ. எண் | பாடப்பிரிவு | பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5. | Network Engineering | 9431 |
| 6. | Block Chain Development | 7946 |
| 7. | Digital Marketing | 7072 |
| 8. | Product Design Engineering and Modelling | 5678 |
| 9. | EV Design | 4971 |
| 10. | Foundation of AI, ML, FS | 4915 |
| 11. | Other Courses | 29571 |
| | **மொத்தம்** | **154950** |

**10.7.6 மண்டல வாரியான 'நான் முதல்வன்' பயிற்சித் திட்டத்தில் பதிவு செய்த பொறியியல் கல்லூரி மாணவர்களின் விவரம்**

| வ. எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் | கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை | மாணவர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சென்னை மண்டலம் | செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் | 81 | 130752 |
| 2 | மத்திய மண்டலம் | அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, , திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, | 74 | 75496 |

| வ. எ ண் | மண்டலத்தி ன் பெயர் | மாவட்டங்கள் | கல்லூரிகளி ன் மொத்த எண்ணிக் கை | மாணவர்களி ன் மொத்த எண்ணிக் கை |
|---|---|---|---|---|
| | | பெரம்பலூர், நாகப்பட்டினம் | | |
| 3 | வடக்கு மண்டலம் | திருவண்ணாமலை, ராணிப்பேட்டை , வேலூர் ,விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர் | 41 | 28449 |
| 4 | மேற்கு மண்டலம் | சேலம் ,நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர் | 97 | 188253 |
| 5 | தெற்கு மண்டலம் | திருநெல்வேலி ,தூத்துக்குடி,விருதுநக ர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை கன்னியாகுமரி | 90 | 76022 |
| **மொத்தம்** | | | **383** | **498972** |

## 10.8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன் " பயிற்சித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 10 பல்கலைக் கழகங்களின் கீழ் இயங்கி வரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு, நான் முதல்வன் திட்டம் ஜனவரி 2023 முதல் தொடங்கப்பட்டது. நான் முதல்வன் திட்டத்தின்

கீழ் மொழித் திறன், கணினித் திறன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த திறன் பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றைப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் 2 மதிப்பீடுகள் கொண்ட கட்டாயப் பாடமாக்க பரிந்துரை செய்யப்பட்டன.

**10.8.1 பயிற்றுநர்களுக்கான பயிற்றுவிப்பு மேம்பாட்டுத்திட்டம்:**

குழுமக் குழு கூட்ட ஆலோசனையின்படி, அனைத்து கட்டாய பாடத்திட்டங்களிலும் திறன் முயற்சிகளின் நிலைத்தன்மையை உறுதிசெய்ய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் மேம்பாட்டு நிகழ்ச்சி (FDP) இணைக்கப்பட்டது. எனவே, கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கான FDP திட்டமிடப்பட்டு 30.01.2023 - 11.02.2023 வரை மாநிலம் முழுவதும் உள்ள அந்தந்த பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்டது. திறன் பயிற்சியின் தேவைக்கேற்ப 2 நாட்கள் முதல் 5

நாட்கள் வரை நேரடி வகுப்பறைப் பயிற்சியாகவும் அதனை தொடர்ந்து தேவையின் அடிப்படையில் மெய்நிகர் / இணையவழிப் பயிற்சிகளாகவும் நடத்தப்பட்டது.

உயர்கல்வி துறையின் ஒத்துழைப்போடு அந்தந்த துறை சார்ந்த பயிற்சிகளில் அத்துறை சார்ந்த பேராசிரியர்கள் கலந்து கொள்வது உறுதி செய்யப்பட்டது, எனினும், இப்பயிற்சியில் கலந்து கொள்ள தவறிய பேராசியர்களுக்கு வாரந்தோறும் மெய்நிகர்/இணையவழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 9183 ஆசிரியர்கள் வளர்ந்து வரும் தொழில் துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 10.8.2 "நான் முதல்வன்" திட்டத்தில் பயன்பெறும் கல்லூரிகள் மற்றும் மாணவர்கள் விவரம்

'நான் முதல்வன் திட்டம்' 2022-23 ஆம் ஆண்டில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அரசு தன்னாட்சி கல்லூரிகள்,

தன்னாட்சி அல்லாத அரசு கல்லூரிகள், தன்னாட்சி அல்லாத அரசு உதவி பெறும் கல்லூரிகள், மற்றும் தன்னாட்சி அல்லாத தனியார் கல்லூரிகள் ஆகிய நான்கு வகையானக் கல்லூரிகளில் பயிற்சி வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 842 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பயனடைந்துள்ளன. இதன் மூலம் மொத்தம் 8,11,338 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நான் முதல்வன் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி வகைகள் | பயனடைந்த கல்லூரி எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தன்னாட்சி அல்லாத அரசு கல்லூரிகள் | 162 |
| 2. | அரசு தன்னாட்சி கல்லூரிகள் | 19 |
| 3. | தன்னாட்சி அல்லாத அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 65 |
| 4. | தன்னாட்சி அல்லாத தனியார் கல்லூரிகள் | 596 |
| | **மொத்தம்** | **842** |

| வ. எண் | பருவம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | $2^{ND}$ SEMESTER | 2,73,483 |
| 2. | $4^{TH}$ SEMESTER | 2,90,577 |
| 3. | $6^{TH}$ SEMESTER | 2,47,278 |
| மொத்தம் | | 8,11,338 |

## 11. மேலும் திறன் அளித்தல், வேலைக்கான வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்புக்கான நான் முதல்வன் இணைய முகப்பு

"நான் முதல்வன்" என்னும் மாபெரும் திறன் பயிற்சி இணையதள முகப்பு தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட கற்றல் மேலாண்மை தளமாகும். நான் முதல்வன் திட்டம் ஒரு தகவல் திறன் தளத்தின் மூலம் இயக்கப்படுகிறது. அதில் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள், இணைக்கப்பட்ட பாடங்கள், இணையவழி பாடங்களின் உள்ளடக்கம், வழிகாட்டுதல் மற்றும் திறன் தேடல் ஆகியன இடம் பெற்றுள்ளன. இது கல்லூரி மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும்

வேலையை அடைவதற்கு தேவையானத் தகுதிகள், திறன்கள் மற்றும் நிபுணத்துவத்துடன் கூடிய படிப்புகளை வழங்க உதவுகிறது. நான் முதல்வன் தொழில் துறைகளுக்குத் தேவையான திறன்களில் பயிற்சியைக் மேற்கொண்ட மாணவர்களைத் தொழில்துறையோடு இணைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

திறன் மேம்பாட்டிற்கெனத் தனித்துவமாகச் செயல்பட்டு வரும் நான் முதல்வன் இணையதளம் (www.naanmudhalvan.tn.gov.in) எளிதாக பயன்படுத்தக் கூடிய வகையில் செயல்படுகிறது.

தரமானப் பயிற்சி மற்றும் பயிற்சித் திட்டத்தைச் சீராகச் செயல்படுத்துவதை உறுதி செய்யும் தகவல் களஞ்சியமாக இது செயல்படுகிறது. அனைத்து மாணவர்களும் கல்லூரிகளால் இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான கட்டாயப்பாடம் ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர் பதிவு,

பாடங்கள் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. பாடத்திட்டங்கள் முடிந்ததும் மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**11.1 எதிர்காலத் தொழில் மற்றும் வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் திறன் பயிற்சி திட்டம்:**

நான் முதல்வன் இணையதளத்தில் மாணவர்களின் விவரங்களைப் பின்வரும் வகைகளில் பட்டியலிட வசதி செய்கிறது இதன் அடிப்படையில் தேவையானப் பயிற்சிகள் வழங்கலாம்.

- ❖ வேலை வாய்ப்பு பெற்றவர்கள்
- ❖ வேலை தேடுதல்
- ❖ தொழில்முனைவு (அல்லது) குடும்ப வணிகம்
- ❖ உயர் கல்வி படிப்புகள்
- ❖ போட்டித் தேர்வுகள்

**11.2 வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சித் தொகுப்பு – "நான் முதல்வன்"**

நான் முதல்வனின் வேலைவாய்ப்பு தளம், மாணவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புகளைப் பெற உதவுகிறது. நான் முதல்வன் ஒருங்கிணைக்கப்பட்ட வேலைவாய்ப்புத் தளம் தொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் இருவரையும் ஒன்றிணைக்கிறது.

இந்த வேலைவாய்ப்பு இணையதளத்தில் தொழில் நிறுவனங்கள் பல்வேறு துறைகளின் கீழ் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம், பதிவுசெய்யப்பட்ட தொழில்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (Micro Small and Medium Entreprenurs), தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (State Industries Promotion Corporation of Tamil Nadu), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் (Directorate of Industrial Safety and Health), தமிழ்நாடு புத்தொழில் நிறுவனம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

(Electronics Corporation of Tamil Nadu), Guidance Tamil Nadu போன்ற பல்வேறு துறைகளால் சரிபார்க்கப்படுகின்றன. சரிபார்க்கப்பட்ட தொழில்துறையினர் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்கலாம். மாணவர்களின் திறன்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களைத் தேடும்போது அவர்களை நிறுவனங்கள் கண்டறிய முடியும்.

வேலை வழங்குநர்கள், மாணவர்களைத் தெரிவு செய்யவும் தொழில் துறையின் தேவைகளுக்கேற்ப வேலைவாய்ப்புகளை அறிவிக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது. மாணவர்கள் திறன் தொகுப்பின் அடிப்படையில் வேலைவாய்புகளைத் தெரிந்து விண்ணப்பிக்கலாம். தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு இணையதளம் மூலம் மாணவர்களுக்குப் பணி நியமனக்கடிதத்தை வழங்கிக் கொள்ளலாம்.

## 11.3 “நான் முதல்வன் ” திறன் பதிவேடு

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் அடங்கிய திறன் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொழில்துறைகள் ஒரு குறிப்பிட்ட திறன் தொகுப்பில் உள்ளவர்களைத் தெரிந்துகொள்ள உதவும் மற்றும் தொழிற் சந்தையில் கிடைக்கும் வேலை வாய்ப்புகளை அனைத்து மாணவர்களுக்கும் (கிராமப்புற மற்றும் நகர்ப்புர) வெளிப்படுத்தும் இந்தத் திறன் பதிவேடு கிராமப்புறங்களை உலகளாவிய வேலைவாய்ப்புகளுடன் இணைக்க உதவும்.

## 11.4 நிரலோட்டம் (Hackathon) மூலம் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தைக் வெளிக்கொணர்தல்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அன்றாட வாழ்க்கையில் மற்றும் தொழிற் நிறுவனங்களில்

எதிர்கொள்ளும் சில அழுத்தமானப் பிரச்சனைகளுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டறியும் வகையில் நான் முதல்வன் நிரல் திருவிழா தளத்தை உருவாக்கியுள்ளது. மைக்ரோசாப்ட், கூகுள், ஆட்டோடெஸ்க் போன்ற பல்வேறு முன்னணி நிறுவனங்களுடனும், ஐஐடி-பாம்பே, ஐஐடி-மெட்ராஸ் முதலிய முன்னணிக் கல்வி நிறுவனங்களுடனும் இனணந்து பல நிரலோட்டப் போட்டிகள் மற்றும் உள்ளுரைப் பயிற்சிகள் நடந்து வருகின்றன.

இந்த முன்னெடுப்பானது தமிழ்நாட்டிற்குப் படைப்பாற்றல், புதுமை, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் குறித்து உறுதியானத் தீர்வுகளை வழங்க உதவும். இது 21 ஆம் நூற்றாண்டின் திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பின் முக்கிய சவால்களை எதிர்கொள்ளும் நிலையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நிறுவனங்களுக்குத் தொழில்துறைக்

கோரிக்கைகளைப் புரிந்து கொள்வதற்கும் தற்போதைய தேவைக்கேற்ப அவர்களின் கல்விமுறையை மறுசீரமைப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.

### 11.4.1 சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் (ஐஐடி மெட்ராஸ்) ஆராய்ச்சிப் பூங்கா மாணவர்களுக்கானப் பணிசார்ந்த பயிற்சித் திட்டம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சி பூங்கா உடன் இணைந்து மாணவர்களுக்கான உள்ளுறைப் பயிற்சி (Internship) திட்டத்தை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குத் தொழில்துறை நிபுணர்கள் மூலம் வழிகாட்டி, இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்கா மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும், ஐஐடி மெட்ராஸின் ஒத்துழைப்புடன்

பின்னோக்குப் பொறியியல் குறித்த அனுகுமுறையை வளர்ப்பதற்காக அடுத்த பருவம் முதல் கற்றல் திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

**11.4.2 மும்பையில் உள்ள இந்திய தொழில் நுட்பக் கழகத்துடன் (ஐஐடி மும்பை) FOSSEE எனும் மென்பொருள் கல்வியில் இணைந்து செயல்படுவது.**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஐஐடி பாம்பே போசி (IIT Bombay) (Free/Libre and Open Source Software for Education) உடன் இணைந்து நடத்தப்பட்ட நிரலோட்டத்தில் மாணவர்கள் இலவச மற்றும் திறந்த மூல மென்பொருளையும் தொலை உணர்வு தகவல் தரவையும் (Remote Sensing Data) பயன்படுத்தி வரைபடங்களை உருவாக்குவார்கள்.

அதிக எண்ணிக்கையிலானப் பங்கேற்பு அணிகளைக் கொண்ட கல்லூரிகள் தமிழ்நாடு

திறன் மேம்பாட்டுக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். மேலும், இப்போட்டியில் சிறப்பான வகையில் செயலாற்றும் திறன் கொண்ட மாணவர்கள் கண்டெடுக்கப்பட்டு அவர்களுக்கு IIT Bombay - யில் உள்ளுறைப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வேலைவாய்ப்பு திருவிழாவில் தனிப்பட்டமுறையில் அழைக்கப்படுவார்கள்

**11.4.3 மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (ஐஐடி மும்பை) நிகழ்நிலையில் நடைபெறும் மெய் நிகர் தொழில் நுட்ப ப்போட்டி(Virtual Walk Through Competition) போட்டியில் கலந்து கொள்ளுதல்**

நான் முதல்வன் கட்டாயப் படிப்பை முடித்த மாணவர்களுக்கு, ஐஐடி பாம்பே மற்றும் ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சகம் ஆகியவற்றால் நடத்தப்படும் மெய்நிகர் நடைமுறைப் போட்டியில்

பங்கேற்று கட்டடக்கலை காட்சிப்படுத்தல் வாய்ப்பு வழங்கப்படும்.

**11.4.4 மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து (ஐஐடி மும்பை) உதவித்தொகையுடன் கூடிய தகவல் குறிப்புகள் வரைவு போட்டி**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், இந்திய தொழில் நுட்பக் கழகம், மும்பை, தேசிய மெய்நிகர் நூலகம் மற்றும் இந்தியப் பண்பாட்டு அமைப்புடன் இணைந்து “கற்கும் போதே ஊதியம் பெறும்” திட்டத்தை நடத்துகிறது. ஐஐடி பாம்பேயின் சான்றிதழுடன் இது ஒரு பகுதி நேரப்பணி வாய்ப்பு. இந்தியாவின் பல்வேறு மாவட்டங்களில் மாணவர்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு தொடர்புடைய முக்கிய நபர்கள், பற்றி 200 வார்த்தைகளுக்கு ஒரு தகவல் குறிப்பு எழுத வேண்டும், அவர்கள் எழுதும் ஒவ்வொரு குறிப்பிற்கும் ரூ.400 வழங்கப்படும். நான் முதல்வன் கேம்பிரிட்ஜ் ஆங்கிலப் பயிற்சி பெற்ற

மாணவர்களிடமிருந்து ஒரு தகவல் குறிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கல்லூரிகளிலும் எல்லா துறையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இது பொருந்தும்.

### 11.4.5 சங்கிலித் தொடர் தரவுத்தளம் (Block Chain) உள்ளுரைப்பயிற்சி

நான் முதல்வன் IBC மீடியாவுடன் இணைந்து மாணவர்களின் திறனை மேம்படுத்த உள்ளுரைப் பயிற்சிகள் நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 3 வெவ்வேறு படிப்புகளில் பங்கேற்று, திட்டத்தை முடிக்கும்போது, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்களை மேம்படுத்துகிறார்கள்.

- மென்பொருள் குறியீட்டு முறை: RUST, Polka dot Ecosystem போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆழ்ந்த குறியீட்டு முறையைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பைத் தொழில் வல்லுநர்களால்

15 நாட்கள் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் மாணவர்கள் பெறுகிறார்கள்.

- ஆன் கிரவுண்ட் ஆல்ட் ஹேக்: வெப்3 மற்றும் பிளாக்செயின் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் மேம்பாடு அடைய 8 நாட்கள் புத்துணர்வு முகாம் நடத்தப்படும்.
- நிபுணர்களைக் கொண்டு உருவாக்குதல்: இந்தத் திட்டத்தில் 45 நாட்களுக்குத் தொழில் வல்லுநர்களுடன் நேரடி உலக வணிகத்தின் தீர்வுகளைக் கட்டமைக்கும் வாய்ப்பை மாணவர் பெறுவர்.

### 11.4.6 அண்ணா பல்கலைக்கழகத்தில், சியட் நிறுவனத்துடன் இணைந்து Fusion 360 வடிவமைப்புப் போட்டி

நவீன தொழில் நுட்ப யுக்திகளில் தமிழ்நாட்டு மாணவர்களைத் தயார் செய்யும் விதமாக Fusion 360 எனும் மென்பொருள் வடிவமைப்பு சவாலை ஆட்டோடெஸ்க் நிறுவனம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்

கழகத்துடன் இணைந்து அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜியின் ஆராய்ச்சி மையம் மூலம் (சியட்) நடத்தியது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் எதிர்காலத் திறன் மேம்பாட்டிற்காக மாணவர்களை மேம்படுத்துவதாகும். இந்தத் திட்டமானது, ஜெனரேட்டிவ் டிசைன் (AI - அடிப்படையிலான கற்றல்), சேர்க்கை உற்பத்தி போன்ற புதிய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்த உதவுகிறது. இதன் மூலம், அவர்களின் வடிவமைப்புத் திறன் சிந்தனையில் அவர்களின் திறன்களை மேம்படுத்துகிறது.

சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, மற்றும் திருச்சி ஆகிய 5 மண்டலங்களில் முதற்கட்டப் போட்டி 3 நிலைகளில் நடத்தப்பட்டது. இரண்டாமாண்டு முதல் இறுதியாண்டு வரையிலானப் பொறியியல் மற்றும் டிப்ளமோ மாணவர்கள் இந்த வடிவமைப்பு

சவாலில் பதிவு செய்து கலந்து கொண்டனர். பொறியியல் மாணவர்களுக்கும், பாலிடெக்னிக் மாணவர்களுக்கும் இரண்டு வெவ்வேறு நிலைகளில் போட்டிகள் இருந்தன.

மூன்று நிலைகளின் வெற்றியாளர்களிடமிருந்து 320 மாணவர்களைக் கொண்ட 120 அணிகள் Fusion 360 மேல்நிலை சவாலுக்கு அழைக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்கு வெவ்வேறு தலைப்புகள் வழங்கப்படுகின்றன. டெய்ம்லர் டிரக் இன்னோவேஷன் சென்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட், சீமென்ஸ் கேம்சா, ரெனால்ட் நிசான் டெக்னாலஜி, போஷ், ஜஜிசிஏஆர், கேட்டர்பில்லர் இந்தியா பிரைவேட் லிமிடெட் போன்ற பல்வேறு நிறுவனங்களின் புகழ்பெற்ற தொழில்துறை நடுவர்களால் மதிப்பீடுகள் திட்டமிட்டப்படி நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. வெற்றியாளர்களுக்கு உயர் மதிப்பு திறன் பயிற்சித் திட்டங்கள் மற்றும் உள்ளுறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.

## 12. நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள்

நான் முதல்வன் - போட்டித் தேர்வுகள் என்ற பிரிவு மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் மார்ச் 7, 2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. கடந்த சில வருடங்களாக, ஒன்றிய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்வானவர்களின் எண்ணிக்கை, வங்கித் தேர்வுகள், ஒன்றிய அரசு ஆட்சேர்ப்பு முகமைகள் நடத்தும் ரயில்வே தேர்வுகள் (RRB) மற்றும் பணியாளர் தேர்வுகள் (Staff Selection) ஆகியவை குறைந்து வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் என்ற பிரிவின் கீழ், மத்திய அரசால் நடத்தப்படும் பணி நியமனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்களுக்குப் போதுமான அளவில் வெற்றிபெறுவரை உறுதி செய்யவும், தற்போதுள்ள நிலைகளில் ஒரு மாற்றத்தைக்

கொண்டு வரவும் முக்கியத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

Indian Institute of Technology (IIT) Joint Entrance Exam (JEE), Common Law Admission Test (CLAT) போன்றவற்றுக்கானப் பயிற்சியாளர்கள் / மாணவர்களுக்கு உரிய திறன்களைக் கொண்ட தரமானப் பயிற்சியாளர்கள் மாநிலம் முழுவதும் போதுமான எண்ணிக்கையில் கிடைக்கச் செய்வதற்காக "வல்லுநர் பயிற்சி" மூலம் என்ற நிகழ்ச்சியை நடத்த இந்த அமைப்பு உத்தேசித்துள்ளது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெறும் வகையில், தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம்-2023-24-ல் ஒரு சிறப்பு ஊக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அண்ணா பணியாளர் நிர்வாகக் கல்லூரியுடன் இணைந்து குடிமைப் பணித் தேர்வு எழுத விரும்புவோர் சிறந்த பயிற்சி வசதிகள் மற்றும் பொருட்களைப் பெற உதவும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் 1000 குடிமைப் பணித் தேர்வு விண்ணப்பதாரர்கள் அடிப்படைத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.7500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) 10 மாதங்களுக்கு வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மொத்தமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

நாட்டின் தலைமைப் பதவிகளில் அதிக தமிழ் இளைஞர்களைக் கொண்டு செல்வதே நோக்கமாகும். உலகை வெல்லும் இளைய சமுதாயமாக உருவெடுக்க முயற்சி எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் இது பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

**மேற்கூறிய அனைத்து முயற்சிகளின் மூலம், தமிழ்நாடு, நாட்டின் திறன் மையமாகவும் உலக அளவில் திறன் சூழலை நிர்வகிக்கும் தலைமையிடமாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை.**

### III முடிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிகுந்த தலைமை மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டுதல்கள் ஆகியவை, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை நோக்கி அரசு இயந்திரம் முழுவதும் தொய்வில்லாமல் பணியாற்றுவதற்குரிய உந்து சக்தியாக அமைந்துள்ளன. அரசின் பல முக்கிய கொள்கை அறிவிப்புகள் இந்த ஒட்டு மொத்த வளர்ச்சியை அடைதல் என்ற இலக்கினை நோக்கியே அறிவிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, அடிப்படைக் கட்டமைப்புகளின் வளர்ச்சி மிக அவசியமானது என்பதால் அதற்குப் பெரிய அளவிலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசின் தொலைநோக்கு திட்டமான ”2030 ஆம் ஆண்டில் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி” என்ற இலக்கினை அடைய வேண்டும் என்றால், அதிக நிதி ஒதுக்கீடு தேவைப்படும்

பெருந்திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது மட்டுமல்லாமல், அவை உரிய காலக்கெடுவிற்குள் நிறைவேற்றப் படுவதையும் உறுதி செய்யும் வகையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று, அனைத்து மக்களின் நலன்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை எய்துவதற்காக உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் முன்னுரிமைத் திட்டங்களின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கென வலுவான முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில், இளைஞர்களின் மக்கள் தொகை பெரும்பங்கு உள்ளதைக் கருத்தில் கொண்டு, சம்மந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து, அத்தகைய மனித வளத்தின் பலன்களை முழுமையாகப் பயன்படுத்தி வளர்ச்சி அடைவதே "நான் முதல்வன்" திட்டத்தின் நோக்கமாகும். மக்களுக்கான சேவைகளின் தரத்தினை அதிகப்படுத்தவும் சிறப்பான ஒரு நிர்வாகத்தினை

வழங்கிடவும் மின்னாளுமை முன்னெடுப்புகளின் செயலாக்கம் உரிய முறையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கள ஆய்வுகள் ஆகியவை தொடர்ச்சியானக் கண்காணிப்புகளுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் விரைவாகச் செயல்படுத்தப்படவும் பெரும்பங்காற்றுகின்றன. இத்துறை தன்னுடைய கண்காணிப்பு முறைகளை மேலும் செம்மைப்படுத்துவதன் மூலம் அரசின் மேற்கண்ட முயற்சிகள் நிறைவேறுவதற்கு தொய்வில்லாமல் முழு ஈடுபாடுடன் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

**உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்
துறை அமைச்சர்




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "நான் முதல்வன்" என்ற திட்டத்தை 01.03.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்தார்கள்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "நான் முதல்வன்" என்ற
திட்டத்தை 01.03.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்தார்கள்.




நான் முதல்வன் இணையதள முகப்பு (www.naanmudhalvan.tn.gov.in)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.08.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் தொடங்கப்பட்டது




மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால்
நான் முதல்வன் கீழ் போட்டித் தேர்வுகள் பிரிவு 07.03.2023 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்
தொடங்கி வைக்கப்பட்டது




15.02.2023 மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் சேலத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்ற பொறியியல் கல்லூரி மாணாக்கர்களுடன் கலந்துரையாடல்



சென்னை கண்ணகி நகரில், முதல் தலை முறை திறன் பயிற்சி மையம்
அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது - 21.02.2023




ஐ.பி.சி. மீடியாவுடன் இணைந்து பிளாக்செயின் உள்ளுரைப் பயிற்சி (Block Chain Internship),
அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு 24.3.2023 அன்று நடத்தப்பட்டது.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.